இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 09 | திகதி : 11.07.2021 | விலை : 30.00

# சமாதான ஆய்வு மையம் நிறுவப்படும்

## – வடக்கு – கிழக்கு ஆயர் மன்றத்தில் தீர்மானம் –



இலங்கையில் சமாதானத்தையும் ஒப்புரவையும் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக சமாதான ஆய்வு மையம் ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப் படும் என வடக்கு-கிழக்கு ஆயர் மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், திருகோ ணமலை ஆகிய தமிழ் மறைமாவட்டங்களின் ஆயர்களையும் குரு முதல்வர்களையும் அங்கத் தவர்களாகக் கொண்ட வடக்கு-கிழக்கு ஆயர் மன்றக் கூட்டம் கடந்த 09-07-2021 வெள்ளிக்கிழமை வவுனியா திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நடைபெற்றபோதே மேற்படி விடயம் ஆராயப்பட்டது. இலங்கையில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற போரின் விளைவாக இனங்களுக்கி டையே ஏற்பட்ட பெரும் இடைவெளியை நீக்கி ஒப் புரவையும் ஒன்றிப்பையும் ஏற்படுத்துவதே இந்த சமாதான ஆய்வு மையத்தின் நோக்கமாகும்.

இதன் முக்கிய செயற்பாடுகளாக சமாதானத்தையும் ஒப்புரவையும் ஊக்குவிக்கின்ற புத்தகங்கள், இலக்கி யங்கள், கட்டுரைகள், சுற்றுமடல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றை உள்ளடக்கிய நூலகம் அமைத்தல். ☞ 02

## ஆரோபண சிறுவர் இல்லத்தில் இயற்கைப் பசளை உற்பத்தி



ஆரோபண சிறுவர் இல்லத்தில் அமைக்கப்பட்டு வந்த தேங்காய் மட்டையினைப் பதப்படுத்தி இயற்கைப் பசளை உற்பத்தி செய்யும் தொழிற்கூடம் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் 20.06.2021 அன்று ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.

தேங்காய் மட்டையினைப் பதப்படுத்தி இயற்கைப் பசளை உற்பத்தி செய்யும் தொழில் நிலையத்தின் கட்டிடத் தொகுதியினையும் அதற்கான இயந்திரங்களையும் அமைப் பதற்கான நிதி உதவியினை ஜேர்மன் நாட்டின் பெர்லின் நகரிலுள்ள "திருக்குடும்ப பங்குத் திருஅவையினர்" நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். ஒரு மில்லியன் ரூபா பெறும தியான இத்தொழிற்கூடம் ஆரோபண சிறுவர் இல்லத்தின் வருமானத்தினைப் பெருக்கும் நோக்குடன் மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி வழங்கும் நோக்கிலும் ஆரோபண சிறுவர் இல்ல முன்னாள் இயக்குநர் அருட்பணி. S. யூட் அமலதாஸ் அடிகளாரின் முயற்சியால் முன்னெடுக்கப்பட்டது.

## வெள்ளி விழாக்காணும் இரு குருமணிகள்








**அருட்பணி**
**M. றெக்ஸ் சவுந்தரா**

பக்தியின் கவிமாலை
தொகுத்த அடிகளுக்கு
குருத்துவ வெள்ளிமாலை
சூடி வாழ்த்துகின்றோம்
இருளோடு போராடும்
இனத்தவர் எமக்கு
இறையொழியாகி நின்று
குருத்துவம் என்பது
அலங்காரம் அன்று
ஆன்மீகம் என்பதை
ஆணித்தரமாய் அறையும்
பணிக்குருவே வாழ்க நின் பணி!

**அருட்பணி**
**S.M.P. ஆனந்தகுமார்**

குருத்துவம் வழி
இறைமகத்துவம் வளர்ந்து
வெள்ளித் தடமதில்
பதமிடும் குருவே வாழ்க!
துன்பங்களில் துவண்டிருக்கும்
தேவையுள்ள மக்களுக்கு
துயர்துடைக்கும் கரமாகி
குருத்துவம் என்பது
பலம் அன்று
பாலம் என்பதை
பாங்குறவே பகரும்
பணிக்குருவே! வாழ்க நின் பணி.

*இரு வீரும் அருட்சகோதரராய்*
*யாழ் மண் சந்தித்த*
*இடப்பெயர்வு பேரவலத்தில்*
*முதியோர்களை பராமரித்த*
*முத்தான சேவையதால்*
*மக்கள் மனங்களில்*
*மறுகிறிஸ்துவாய் பதிவானீர்*

## கத்தோலிக்க, கிறிஸ்தவ நாகரிக பாட பிரபல ஆசிரியர் திருமதி மல்லிகா ஜோண் அரியதாஸ் இறைவனடி சேர்ந்தார்



யாழ். மறைமாவட்டம் உட்பட தேசிய ரீதியில் கத்தோலிக்க, கிறிஸ்தவ பாடகற்பித்தலில் பிரபல்யம் பெற்ற திருமதி மேரி மல்லிகா ஜோண் அரியதாஸ் அவர்கள் 13.06.2021 அன்று கொவிட் தொற்றால் காலமானார்.

க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்கள் கத்தோலிக்க, கிறிஸ்தவ பாடத்தில் உயர் சித்திகளைப் பெற வழிகாட்டிய யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் ஒய்வுபெற்ற ஆசிரியரான இவர் யாழ் மறை மாவட்ட மறைக்கல்வி நிலையத்தின் கல்விப் பணியிலும் தன்னை தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதுடன் யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினராக விளங்கி அதன் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

ஆசிரியையின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற மன்றாடுகின்றோம்.

## திருத்தந்தையின் உடல்நலனில், திருப்தி அளிக்கும் முன்னேற்றம்

உரோம் நகரின் ஜெமெல்லி மருத்துவமனையில், கடந்த ஜுலை 4, அனுமதிக்கப்பட்டு, அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல்நலனில், திருப்தி அளிக்கும் முன்னேற்றம் தெரிகிறது என்று, வத்திக்கான் செய்தித் துறையின் தலைவர், மத்தேயோ ப்ரூனி அவர்கள், அறிக்கையொன்றை வெளியிட்டார்.

திருத்தந்தை விரைவில் உடல்நலம் பெற்றுத் திரும்பிவர, உலகின் பல பகுதிகளிலிருந்-தும், அவருக்கு, செபம் கலந்த வாழ்த்துக்கள், வந்தவண்ணமுள்ளன.

இதையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வெளியிட்ட செய்தியில், "இந்நாட்களில் என்னை வந்துசேர்ந்த அக்கறை நிறைந்த செய்திகள், என்னை மிகவும் தொட்டன. தங்கள் செபங்களையும் அருகாமையையும் வெளியிட்டுள்ள ஒவ்வொருவருக்கும் நான் நன்றி கூறுகிறேன்" எனத் தெரிவித்தார்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## நிகழ்நிலைக் கல்வி சாத்தியமாகுமா?

உலகம் முழுவதும் ஆக்கிரமித்திருக்கும் கொள்ளை நோயின் தாக்கத்தால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல், சமூக, பொருளாதார, சமய மாற்றங்களின் மத்தியில் இவை முகங்கொடுத்து வரும் சவால்களுக்கு மத்தியில் உலகத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தி படைத்த இளைய சமூகத்தின் கல்வி புலமும் பலத்த சவாலுக்கு உற்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாவால் ஏற்பட்ட சாதகமான விடயங்களைத் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி உச்ச நிலையை அடைந்திருப்பதைச் சுட்டிக் காட்டலாம். இன்று எமது நாடு உட்பட் அனைத்து நாடுகளிலும் ஊரடங்கு சட்டங்கள், பயணத் தடைகள் எனப் பல்வேறு பெயர்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டுக் கொரோனாவின் பரவலுக்குப் பாதுகாப்புக் கவசம் இடப்பட்டது.

பாராளுமன்ற நிகழ் நிலை அமர்வுகள், கூட்டங்கள், வேலைத் திட்டங்கள் அனைத்தும் நிழல் நினைவில் (Online) நடத்தப்படுகின்றன. இவற்றின் பின்னணியில் பாடசாலைகள் இயங்காத நிலையில் மாணவர்களின் பாடங்கள் நிகழ் நிலையில் (Zoom) ஊடாக நடத்தப்படு கின்றது. பாடசாலை கள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் மாணவர்களின் பாடங்களும் பரீட்சைகளும் கூட இத்தகைய நிகழ் நிலையில் நிறைவேற்றப்படுகின்றது.

நிகழ் நிலை கல்வி முறை மேற்குலக நாடுகளில் கொரோனாவிற்கு முற்பட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, நடைமுறைச் சாத்தியத்துடன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. கொரோனாவிற்குப் பின் எமது நாடு போன்ற கீழைத்தேய நாடுகளுக்கு அது இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. சென்ற வருடமும் இவ் வருடமும் எமது நாட்டில் கொரோனா அலைகள் வீச்சாக எழுந்த பொழுது நாடு முடக்கப்பட்ட நிலையில் பாடசாலைகளும் முடக்கப்பட்டன. இந்தச் சந்தர்ப்பங்களில் மாணவர்கள் நிகழ் நிலையில் கல்வியைத் தொடரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இத்தகைய கல்வியின் எதிர்கால விளைவு எப்படி இருக்கப் போகிறது என்பது பற்றிய சிந்தனைகள் கல்விப் புலத்திலும், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியிலும் மேலெழத் தொடங்கியுள்ளது. Zoom கல்வியில் மாணவர்கள் எதை பார்த்தார்கள் என்றோ எதை விளங்கிக் கொண்டார்கள் என்றோ யாருக்கும் இதுவரை தெரியாது. பாடசாலை ஆரம்பித்த பின்னரும், பரீட்சைப் பெறு பேறுகள் வெளிவந்த பின்னரும் தான் விளைவுகள் வெளிச்சத்திற்கு வரும்.

இன்றைய சூழ்நிலையில் மாணவர் தம் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை காட்ட வேண்டிய பொறுப்பு பெற்றோரையே சார்ந்துள்ளது. இதற்கு முன்னர் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பி விட்டோம். அதிபரும், ஆசிரியர்களும் பார்த்து கொள்வார்கள் என்ற தொனியு டன் பெற்றோர்களில் பலர் செயற்பட்டுள்ளதை மனட்சாட்சியுடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இன்றைய சூழலில் அதே பல்லவியைப் பாடினார்கள். பிள்ளைகளின் எதிர்காலம் இருள் மயமாவதை தவிர மாற்று வழி கிடையாது. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டிய காலம் இதுவாகும்.

பிள்ளைகள் Zoom வகுப்பிற்குப் போனதால் அவர்கள் பாடத்தைப் படித்து விட்டார்கள் எனப் பொருள் கொள்வது அபத்தமானது. Zoom வகுப்பில் படிப்பதற்காகப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கைத்தொலைபேசிகளைத் தாராளமாகவே வாங்கிக் கொடுத்துள்ளனர். இன்னும் சில பெற்றோர்கள் தம்மை உருக்கி கடன்பட்டு, நகைகளை அடகு வைத்து பிள்ளைகள் கற்பதற்காக கைத்தொலைபேசிகளை வாங்கிக் கொடுத்துள்ளனர். நல்ல செயல்களை வாழ்த்தாமல் இருக்க முடியாது. ஆனால் இத்தனையும் செய்து, பெற்றோர்கள் பிள்ளைகள் படிக்கிறார்களா என்பதைச் சீர்தூக்கிப் பார்க்காமல் இத்துடன் எமது கடமைகள் முடிந்து விட்டன என்று ஒதுங்கிக் கொண்டால் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி ஒடுங்கி விடும் என்பதே எதார்த்தமாகும்.

யார்? எதை? எப்படி? எவ்வாறு? எப்போது? சொன்னாலும் நிகழ்நிலை Zoom கல்வி என்பது எமக்குச் சாத்தியப்படாத ஒன்றே ஆகும். இக் கல்வியை வறுமைக் கோட்டில் வாழும் பிள்ளைகளால் பெற முடிகின்றதா? போரினால் வாழ்வாதாரங்களை இழந்து வாழும் குடும்பத் தலைமைத்துவங்களை இழந்து தவிக்கும் பிள்ளைகளுக்கு கைதொலை பேசிகள் எட்டாக் கனிகளாகவே காட்சி தருவதால், இத்தகைய பிள்ளைகள் கல்வி நிலையைத் தொடர முடியுமா? சில பிரதேசங்களில் அலைவரிசை சமிக்ஞை (கவரேச்) இல்லாத காரணத்தால் கைத்தொலைபேசிகள் செயல் இழக்க வகுப்புகள் தடைப்படுகின்றன. இந்நிலையில் நிகழ்நிலை வகுப்பு என்பது தரையில் படுத்து நீச்சல் அடிக்க செல்வதுக்குச் சமனாகும்.

இந் நிலையில் பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்கள் விழிப்பாய் இருக்க வேண்டியது காலம் விரும்பும் கட்டாய பணியாகும். பாடசாலைக்குச் செல்லாது பிள்ளைகள் வீட்டில் இருக்கிறார்கள். இதற்கும் நாம் தான் பொறுப்புக் கூற வேண்டும். சுகாதார வழிகாட்டல்களை ஒழுங்காகப் பின்பற்றி ஒவ்வொருவருக்கும் தன் கடமை உணர்வு இருந்திருந்தால் நாடு நல்ல நிலையில் இருந்திருக்கும், முடங்கியிருக்காது. பிள்ளைகளின் கல்வியும் முடங்கியிருக்காது. எனினும் முடிந்த கதைகளை பின்னோக்கிப் பார்க்காது எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை முன்னோக்கிப் பார்த்தவர்களாக பெற்றோர்கள் செயற்பட வேண்டும். கல்வி வளர்ச்சியில் இக்காலம் கல்லூரிகளின் காலம் அல்ல பெற்றோர்களின் காலம் என்பது நிதர்சனமாகும்.

# துயர் பகிர்கின்றோம்

செபமாலைத்தாசர் சபைக் குருவாகிய அருட்பணி இராஜேஸ்வரன் அடிகளாரின் அன்புத் தாயார் **திருமதி மெற்றில்டா இம்மானுவேல்** அவர்கள் கடந்த 12.06.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட் தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப் பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

திருமறைக் கலாமன்றத்தின் தென்மோடிக் கூத்துமரபின் அண்ணாவியார் **திரு பேக்மன் ஜெயராசா** அவர்கள் கடந்த 20.05.2021 அன்று இறை பதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## புலம்பெயர்ந்தோர் குறித்து திருப்பீடம் கவலை

நாடு விட்டு நாடு புலம்பெயரும், மற்றும், குடிபெயரும் மக்கள், வெறும் எண் ணிக்கைகள் அல்ல மாறாக அவர்கள் ஒவ் வொருவரும் நம் சகோதரர் அல்லது சகோ தரி என்று, ஐ.நா.வின் பன்னாட்டு கூட்டம் ஒன்றில் திருப்பீடம் தன் எண்ணங்களை வெளியிட்டது.

ஐ.நா.வின் புலம்பெயர்ந்தோர் உயர் மட்டக் குழுவான UNHCR என்ற அமைப்பு, ஜெனீவாவில் நடத்திய 81வது கூட்டத்தில், திருப்பீடத்தின் சார்பில் பங்கேற்றோர் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

கடந்த சில ஆண்டுகளாக, பல் வேறு காரணங்களால் உலகெங்கும் பரவி யிருந்த புலம்பெயர்ந்தோர் பிரச்சினை, கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் இன்னும் அதி- கமாக வளர்ந்திருப்பதையும், இந்த நெருக்கடி வேளையிலும் தங்கள் நாட்டைவிட்டு புலம் பெயரும் கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுவோர் கூடுதல் ஆபத்தில் இருப்பதையும் திருப்பீடம் சுட்டிக்காட்டியது. பெருந்தொற்றின் காரண- மாகப் பல நாடுகள் தங்கள் எல்லைகளை முற்றிலும் மூடிவிட்ட நிலையில், பல்லாயிரம் புலம்பெயர்ந்தோர், நாடற்ற, வீடற்ற ஒரு பரிதாப நிலையில் வாழவேண்டியுள்ளது என்று திருப்பீடம் தன் கவலையை வெளியிட்டது.

புலம்பெயர்தல்என்றபிரச்சினையை உருவாக்கும் காரணங்களை அறிந்து அவற்றை நீக்குவதற்கு, பன்னாட்டு அரசு களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை யும், கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில், புலம்பெயர்ந்தோரும் நலவாழ்வு உரிமை களைப் பெற்றவர்கள் என்பதை அனை- வரும் உணரவேண்டும் என்பதையும், தன் விண்ணப்பங்களாக, திருப்பீடம் UNHCR கூட்டத்தில் பதிவுசெய்தது.

## கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் அன்பு என்பது செயற்பாடுடையது

உதவி தேவைப்படும் மக்களுக்குப் பணியாற்றுவது ஒரு வேலையல்ல, மாறாக இயேசுவின் மீட்பளிக்கும் அன்பில் நாமும் பங்குபற்றி சேவையாற்றுவதாகும் என இத்தாலிய கத்தோலிக்கக் கரித்தாஸ் பணியாளர்களிடம் கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே கூறினார்.

இத்தாலிய கரித்தாஸ் அமைப்பு தொடங்கப்பட்டதன் 50ம் ஆண்டு நிறைவையொட்டி, உரோம் நகரின் புனித பவுல் பெருங்கோவிலில் 'பிறரன்பின் பாதை' என்ற தலைப்பில் ஏற் பாடு செய்யப்பட்டிருந்த செபக்கூட்டத்தில், உலகளாவிய கரித்தாஸ் நிறுவனத்தின் தலை- வர் கர்தினால் தாக்லே அவர்கள் தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டபோது, கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் அன்பு என்பது வெறும் உணர்வோ, கருத்தோ அல்ல. மாறாக தூய ஆவி யாரின் கொடைகளைச் செயற்பாடுடையதாக மாற்றுவதாகும் என எடுத்துரைத்தார்.

தூய ஆவியார் வழங்கும் கொடைகளால் நாம் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள் என்று எண்ணவோ, அவர்களை நம் சுயநலத்திற்காகப் பயன்படுத்தவோ முன்வரக் கூடாது என்றுரைத்த கர்தினால் தாக்லே அவர்கள், அன்புடன்கூடிய பணியை பொதுமக்கள் அனை- வரின் நலனையும் மனதில் கொண்டதாக எடுத்து நடத்தவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பிறருக்கு வழங்கவேண்டுமென்ற ஆர்வம், இலாப நோக்கத்தைவிட மதிப்புமிக்கது என்று கூறிய கர்தினால் தாக்லே அவர்கள், நம்மிடமிருப்பதைப் பிறருடன் பகிர்வது என்பது, நற்செய்தியை அறிவிப்பதாகும் எனவும் எடுத்துரைத்தார்.

## திருத்தந்தை குணம்பெற இறைவேண்டல்

ஜெமெல்லி மருத்துவமனையில் புற்றுநோய்ப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் சிறாரும் இளையோரும், திருத்தந்தை விரை வில் குணம்பெறுவதற்குத் தங்கள் வாழ்த்துக் களையும், செபங்களையும் தெரிவித்துள்ள னர்.

இச்சிறாரும், இளையோரும் இணைந்து திருத்தந்தைக்கு அனுப்பியுள்ள மடலில், திருத்தந்தையே, நாம் ஒருவரையொருவர் நேரில் பார்க்க இயலாவிட்டாலும் எங்களது ஆழ்ந்த முத்தங்களையும், நல்வாழ்த்துக் களையும் அனுப்புகிறோம் என்று கூறப்பட் டுள்ளது.

உரோம் குழந்தை இயேசு மருத்துவமனை யில் சிகிச்சை பெற்ற ஜூலியா என்ற சிறுமி, தான் திருத்தந்தையின் கரங்களைப் பற்றிக் கொண்டு நடந்த புகைப்படம் ஒன்றைப் பதிவு செய்து, அதற்கு அருகில், எனதன்புள்ள திருத் தந்தையே, நான் நோயாய் இருந்தபோது, தாங்கள் எனக்காகச் செபித்ததை உணர்ந் தேன், இப்போது, எனது இறைவேண்டலைத் தாங்கள் உணர்வீர்கள் என்று எழுதியிருக்கி றார். இதனை அந்த மருத்துவமனை வெளியிட்டுள்ளது.

## சமாதான ஆய்வு மையம்

1ம் பக்கத் தொடர்ச்சி

சமாதானம் ஒப்புரவு ஆகியவை பற்றிய ஆழமான அறிவைப்பெறும் பொருட்டு பட்டப்பின் படிப்பாக மாணவர்களைக் கற் பித்து உருவாக்குதல், சாமாதான அருங்காட்சி யகம் அமைத்தல், இத்துறையில் நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் வெளியிடுதல், மதங்க ளுக்கிடையிலான உரையாடல்களை நடாத் துதல்மற்றும்வளவாளர்களைஉருவாக்குதல் ஆகியவை திட்டமிடப்பட்டுள்ளன.

இது தவிர தற்போதைய கொவிட் 19 நெருக்கடியான சூழலில் இறைமக்களுக்கு எவ்வாறான வகையில் மேய்ப்புப்பணி ஆற்று வது, பொருளாதார நெருக்கடியில்வாழ்வோருக்கு நிவாரண உதவிகள் வழங்குவது, விரக்தியி லும், நம்பிக்கையிழந்தும் வாழ்வோரை திடப்படுத்துவது, அர்ப்பணிப்போடும் தியாகத் தோடும் பணிபுரிவோருக்கு நன்றிதெரிவிப் பது போன்ற விடயங்களும் மேற்படி வடக்கு-கிழக்கு ஆயர் மன்றக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுத் தீர்மானங்கள் எடுக் கப்பட்டன..

# உயிர்த்தெழுவது ஆன்மீக உடலே. எமது அழிந்துபோகின்ற உடல் அல்ல. கிறிஸ்தவர்களின் உடலை தகனம் செய்தல் பற்றிய திரு அவையின் படிப்பினை

தற்போதைய சூழ்நிலையில் கொரோனா வைரஸ் நோயினால் இறக்கின்றவர்களின் உடல்கள் தகனம் செய்யப்பட்டு அஸ்திகள் வழங்கப்படுகின்றன. எம்மில் பலர் இறந்துபோகும் கிறிஸ்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வது எமது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முரணானது என்று எண்ணுகின்றார்கள். இன்னும் சிலர் இதுபற்றிப் பல சந்தேகங்களைக் கொண்டிருக்கிறார்கள். இப்படியான நிலையில் கிறிஸ்தவர்களின் உடலைத் தகனம் செய்தல் பற்றிய திரு அவையின் நிலைப்பாட்டை இறைமக்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

## வரலாற்றில் திரு அவையின் நிலைப்பாடு

திரு அவை நீண்ட காலமாக, அல்லது மிக அண்மைக் காலம்வரை இறக்கின்ற நம்பிக்கையாளர்களின் உடல்கள் தகனம் செய்யப்படக்கூடாது என்றும் அவை அடக்கம் செய்யப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. ஏனெனில் நம்பிக்கையாளர்களின் உடல்கள் அழியாமல் உயிர்த்தெழும் என்ற நம்பிக்கையைத் திரு அவை உறுதியாகப் போதித்தது. இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பின் விழைவாக எமது உடல்களும் இறுதிநாளில் உயிர்த்தெழும் என்ற விசுவாசத்தில் திரு அவை ஆழமாக ஊன்றியிருந்ததே இதற்குக் காரணமாகும். இதனால் இறந்தவர்களின் உடல்களை எரித்து சாம்பலாக்குவது எமது விசுவாசத்தோடு இணைந்தது அல்ல என்று திரு அவை நம்பியது.

## 1917 ஆண்டு திரு அவைச் சட்டம்

இப்படியான நிலையில் திரு அவை 1917ம் ஆண்டு வெளியிட்ட திரு அவைச் சட்டக் கோவையில் (இல. 1203) இறந்தவர்களின் உடல்கள் தகனம் செய்யப்படக் கூடாது, மாறாக அடக்கம் செய்யப்படவேண்டும் என்ற கடுமையான சட்டத்தையே அறிவித்தது. இருப்பினும் இச்சட்டத்தின் விளக்கவுரையில் ஆபத்தான தொற்றுநோய்கள் காரணமாக இறப்பவர்கள், யுத்தத்தில் அகப்பட்டு உடல்கள் சிதறி இறப்பவர்கள் போன்றோரின் உடல்கள் தகனம் செய்யப்படலாம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் அடக்கம் செய்யப்படும் உடல்களின் உயிர்த்தெழுதல் பற்றிய தனது போதனையில் எதுவித மாற்றத்தையும் அறிவிக்கவில்லை.

## உயிர்த்தெழுவது ஆன்மீக உடலே. எமது அழிந்துபோகின்ற உடல் அல்ல.

ஆயினும் அதற்குப் பிந்திய காலத்தில் திரு அவை நம்பிக்கையாளர் உயிர்த்தெழுவர் என்ற விசுவாசத்தில் எதுவித மாற்றமும் இல்லாமல், உயிர்த்தெழுகின்ற உடல்கள் பற்றிய தனது நிலைப்பாட்டில் வளர்ச்சி கண்டது. அதாவது இறைவார்த்தையின் ஒளியிலும், தூய ஆவியாரின் வழிநடாத்தலிலும், திரு அவை, உயிர்த்தெழுகின்ற எமது உடல் எமது ஆன்மீக உடலேயன்றி, அழிந்து போகின்ற உடல் அல்ல என்று கற்பித்தது. இதன் காரணமாக இறந்தவர்களின் உடல்களைக் கட்டாயமாக அடக்கம் செய்ய வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டில் மாற்றத்தை அறிவித்தது.

## புனித ஆறாம் பவுலின் அறிக்கை

இதன்படி 1963ம் ஆண்டு திருத்தந்தையாக இருந்த புனித ஆறாம் பவுல் வெளியிட்ட பியாம் எற் கொன்ஸ்ரான்ரெம் என்னும் அறிக்கையில் கிறிஸ்தவர்களின் உடல்கள் தகனம் செய்யப்படலாம் என அறிவித்தார். ஆனால், தமது உடல்களைத் தகனம் செய்யவேண்டும் என்று விருப்பம் தெரிவிப்பவர்கள் தாம் உயிர்தெழுவோம் என்ற நம்பிக்கையோடு அவற்றைச் செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார். திருத்தந்தையின் இப் படிப்பினையை திரு அவை 1983ம் ஆண்டு வெளியிட்ட திரு அவையின் சட்டக்கோவையில் உறுதிப்படுத்தியது (தி.ச. 1176). கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி என்ற நூல் இல. 2301ல் இதே படிப்பினையைக் காணலாம்.

## அஸ்திகளுக்கு மரியாதையும் மாண்பும்

1997ம் ஆண்டு திரு அவை தகனம் செய்யப்பட்ட உடல்களின் அஸ்திகளுக்கு, உடல்களுக்கு செய்யப்படுவது போன்ற அதே மரியாதையும் மாண்பும் கொடுக்கப்பட்டு, அடக்கச் சடங்குகள் நடத்தப்படலாம் என்றும் பின்னர் அவை சேமக்காலைகளில் அடக்கம் செய்யப்படவேண்டும் என்றும் அறிவித்தது. உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லாமல் உடல்களைத் தகனம் செய்பவர்களுக்கு அடக்கச்சடங்குகள் மறுக்கப்படவேண்டும் என்பதும் திரு அவையின் சட்டமாகும் (தி.ச. 1184).



அஸ்திகள் அடக்கம் செய்யப்படும் கல்லறைகள் (Columbarium)

## இரு வகை அடக்கச் சடங்குகள்

இவற்றைத் தொடர்ந்து, கடந்த 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி சகல ஆன்மாக்கள் திருநாளன்று உடல்களைத் தகனம் செய்வதுபற்றிய ஒரு தெளிவான அறிக்கையை திரு அவை வெளியிட்டது. இதன்படி, தமது உடல்களைத் தகனம் செய்பவர்களின் அடக்கச் சடங்குகள் பின்வரும் இரண்டு வகையாகச் செய்யப்படலாமெனத் திரு அவை கற்பிக்கின்றது. முதல் வகையாக, இறந்தவரின் உடலை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று திருப்பலி நிறைவேற்றி இறுதி அடக்கச்சடங்குகளை நிவைவேற்றிய பின்னர் அதனை எடுத்துச் சென்று தகனம் செய்துவிட்டு அஸ்தியை எடுத்து அடக்கம் செய்யலாம். அல்லது, இரண்டாவது வகையாக, முதலில் இறந்தவரின் உடலை தகனம் செய்யும் இடத்திற்கு எடுத்துச் சென்று தகனம் செய்துவிட்டு பின்னர் அஸ்தியை ஆலயத்திற்கு கொண்டு வந்து திருப்பலி நிறைவேற்றி இறுதி அடக்கச்சடங்குகளைச் செய்துவிட்டு அடக்கம் செய்யலாம்.



## அஸ்திகள் கட்டாயமாக அடக்கம் செய்யப்படவேண்டும்

தகனம் செய்யப்படுபவர்களின் அஸ்திகள் மட்டில் சில தவறான நடைமுறைகளைத் திரு அவை அவதானித்தது. அதாவது, சிலர் அஸ்திகளை அடக்கம் செய்யாமல் வீடுகளில் காட்சி அலுமாரிகளில் காட்சிப் பொருட்களாக வைத்திருந்து வீட்டுக்கு வருபவர்களுக்கு அவற்றை காட்ட முற்பட்டார்கள். வேறு சிலர் அஸ்தியைப் பங்கிட்டு பல இடங்களில் வைத்திருக்க முற்பட்டார்கள். உதாரணமாக பெற்றோரின் அஸ்தியைபிள்ளைகள் தமக்குள்ளே பங்கிட்டு தத்தம் வீடுகளில் வைத்திருத்தல். இப்படியான நடைமுறைகள் தவறானவை என்று திரு அவை கற்பித்து அஸ்திகள் கட்டாயமாக அடக்கம் செய்யப்படவேண்டும் என்று கண்டிப்பாகக் கட்டளையிடுகிறது.

அருட்பணி. ப. யோ. ஜெபரட்ணம்
குரு முதல்வர்

## தூய ஆவியாரின் ஆலயங்கள், கிறிஸ்துவின் மறை உடல்

தூய ஆவியாரின் ஆலயங்களாக, கிறிஸ்துவின் மறை உடலின் பங்காளிகளாக வாழுகின்ற இறைமக்களாகிய எமது உடல்கள் நாம் எப்படியான நிலையில் அடக்கம் செய்யப்பட்டாலும் கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் விளைவாக ஒருநாள் உயிர்த்தெழும் என்ற நம்பிக்கையோடு நாம் எப்போதும் வாழவேண்டும் என்பதைத் திரு அவை தொடர்ந்து வலியுறுத்துகிறது.

திரு அவையில் வரலாற்றில் எரித்து சாம்பலாக்கப்பட்ட பல மறைசாட்சியர்கள் இன்று புனிதர்களாக மோட்ச இராட்சியத்தில் மகிழ்ந்திருப்பதை நாம் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூரவேண்டும்.

## உடல்களை தகனம் செய்வது பற்றிய தற்போதைய நிலை

மேற்கத்தேய நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்களில் பலர் கடந்த பல வருடங்களாக உடல்களைத் தகனம் செய்து அடக்கம்செய்யும்முறையைக்கடைப்பிடித்து வருகிறார்கள். இதற்கென்று அஸ்திக் கொள்கலன்கள் (Urn) தயாரிக்கப்பட்டு விற்பனையிலுள்ளன. அதேவேளை சேமக்காலைகளில் அஸ்திகளை அடக்கம் செய்வதற்காக விஷேடமாக அமைக்கப்பட்ட கல்லறைகளும் (Cplumbarium) அமைக்கப்பட்டுள்ளன. உடல்களை அடக்கம் செய்வதற்கு ஆகும் செலவோடு ஒப்பிடும்போது அஸ்திகளை அடக்கம் செய்வதற்கான செலவு மிகக்குறைவானதாகும்.

இருப்பினும் எமது நாடு போன்ற கீழைத்தேய நாடுகளில் இறைமக்கள் உடல்களை அடக்கம் செய்வதையே விரும்புகிறார்கள். தற்காலச் சூழ்நிலை காரணமாக தொற்றுக் கிருமியினால் இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்யும் நிர்ப்பந்தம் இருந்தாலும் மக்கள் உடலின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டவர்களாக இவற்றை ஏற்றுக் கொள்கிறார்கள்.

கொழும்பிலுள்ள கனத்தை சேமக்காலையில் அஸ்திகளை அடக்கம் செய்வதற்கான பிரத்தியேக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. நாளடைவில் அனைத்து சேமக்காலைகளிலும் இதுபோன்ற அஸ்திகளை அடக்கம் செய்வதற்கான பிரத்தியேக இடங்கள் அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படலாம். தொற்று நோயினால் இறப்பவர்கள் மட்டுமல்லாது ஏனையவர்களும் இவற்றைப் பயன்படுத்தும் காலம் விரைவில் வரும் சாத்தியமுண்டு.



அஸ்திக் கொள்கலன் (Urn)

## காவலன் கலசம்

# தனிமைப்படுத்தலினால் ஏற்படும் விரக்தியை தன்னம்பிக்கையால் வெல்வோம்

பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிரிகளிலும் ஆன்மீக ரீதியாகவும், உடல் ரீதியாகவும் மனிதன் மேம்பட்டு நிற்பதுசிறப்பம்சமாகும். சிந்தித்தல், செயற்படல், பிறருடன் நட்புறவுடன் பழகுதல், உணர்வுகளுக்கு துலங்கலைக் காட்டுதல் என்னும் சிறப்பான பண்புகளால் மனிதன் விலங்குகளிலிருந்து வேறுபட்டு விளங்குகின்றான். இவ்வாறு மனிதனில் மனிதம் செறிவுற்றுச் செயற்படும் பொழுது மனித வாழ்வு மகத்துவம் மிக்கதாகின்றது.

உளவியலாளர் வில்லியம் ஜேம்ஸ் மனித வாழ்வில் மிக முக்கியமான கண்டுபிடிப்பாகப் பின்வருமாறு கூறுகின்றார். “ஒவ்வொரு மனித மனமும் தனது உள்ளக மனப்பாங்குகளை மாற்றுவதன் மூலம் தனது வாழ்க்கையின் வெளிப்புற அம்சங்களை மாற்றமுடியும்” உள்ளம் கள்ளமின்றி வெள்ளையாயிருக்கும் பொழுது வெளிப்படும் வார்த்தைகள் வசீகரமானவை. நெறிப்படுத்தப்படும் செயற்பாடுகள் நேர்த்தியானவை. பரிணமிக்கும் உறவுகள் பரிசுத்தமானவை.

ஒவ்வொரு மனிதனும் தான் வாழவும், வளரவும், மகிழவும், மலரவும் அன்பு செய்யப்படவும் அறிந்து கொள்ளப்படவுமே விரும்புகின்றான். பிறரது நலனே தனது நலன் என்றும், பிறரின் இன்பமே தனது இன்பம் என்றும் பிறரின் வளர்ச்சியே தனது வளர்ச்சி என்றும் மற்றவர்களை மையமாக வைத்து அவன் வாழ முற்படும் பொழுது மனித வாழ்வு முழுமை பெறுவதை உணரலாம். முழுமை பெற எத்தனிக்கும் மனித வாழ்வில் நிம்மதி நிரந்தரமாக நிலைப்பதில்லை. சலனங்களும், சச்சரவுகளும், விழுதல்களும், வடுக்களும், ஏக்கங்களும், எதிர்பார்ப்புக்களும் தொடரத்தான் செய்கின்றன. நொந்துபோன உள்ளங்களுக்கும், வெந்துபோன நெஞ்சங்களுக்கும், வருந்துகின்ற வாலிபர்களுக்கும், உதிர்ந்து நிற்கும் முதியோருக்கும் ஆறுதல் கூறிட, ஆற்றுப்படுத்த எண்ணற்ற அன்பு கொண்ட நல்ல நண்பர்கள், வாழ்வியல் ஆதரவாளர்கள் இன்று அவசியமாகத் தேவைப்படுகிறார்கள்.

நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகியும் முடிவுறாத நிலையில் கொரோனா என்னும் கொடிய நோய் முழு மனித குலத்தையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. தனிமைப்படுத்தல்களும் முடக்க நிலைகளும் பயணத்தடைகளும் தளர்ந்தபாடில்லை. எவ்வளவு காலத்திற்குத்தான் மனித செயற்பாடுகளை முடக்கிவிடமுடியும். உளரீதியாகவும், உடல் ரீதியாவும், உணர்வுரீதியாகவும் பல பாதிப்புக்களை ஒவ்வொரு சாதாரண மனிதனும் சந்திக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றான். பசி, மனக்கவலை, பொருளாதார நெருக்கடி, கடன்தொல்லை, வேலை செய்யமுடியாத நிலை, தமது நெருங்கிய உறவுகளைப் பராமரிக்க முடியாத நிலை, பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை, பொலிஸ், இராணுவக் கட்டுப்பாடுகள் எனப் பலவிதமான விடங்களில் எமது சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு குடும்பங்களும் இன்னல்களைச் சந்திக்கின்றனர். எப்படி இனி வாழ்வது என விரக்தியின் விளிம்பில் தள்ளப்படும் குடும்ப உறவுகளையும் இன்று எம் சமூகத்தில் காண்கின்றோம். இந்நிலையில் மீளவும் மனித வாழ்வுகள் புத்துயிர் பெற, விழித்தெழ அவசியமானது எது?

**“நீ விழுந்த போதெல்லாம் தாங்கிப்பிடிக்கும் இந்தக் கை,<br>நீ மனம் உடையும் போதெல்லாம் தட்டிக்<br>கொடுக்கும் இந்தக் கை,<br>தனியே நீ அழும் போதெல்லாம்<br>உன் கண்ணீர் துடைக்கும் கை.<br>இது வேறு யார் கையும் அல்ல<br>அது உன்னுள் உள்ள உனது தன்னம்பிக்கை”**

அதை மட்டும் நீ ஒரு போதும் இழந்து விடாதே! ஒரு நொடி துணிந்தால் வாழ்க்கையை முடித்து விடலாம். ஆனால் ஒவ்வொரு நொடியும் துணிந்தால் அதே வாழ்க்கையை வெற்றி கொண்டு விடலாம்.

வாழ்க்கையை வெறுக்க ஆயிரம் காரணங்கள் இருந்தாலும் வாழ்வதற்கு ஒரே காரணம் நாளை எல்லாம் சரியாகிவிடும் என்ற தன் நம்பிக்கை மட்டும்தான். நமக்குள் அடங்கியுள்ள தன்னம்பிக்கை உறுதியாக, நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கும், போராட்டங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் எதிராக நிமிர்ந்து நிற்குமானால் நாம் மீளவும் புத்துயிர் பெற முடியும். இந்த நம்பிக்கை உறுதியாக்கப்படுவதற்கு நம்முள் திறந்த மனப்பான்மை, புலன் உணர்வுகளின் தன்னுணர்வு, மீளாய்வு, ஓய்வு, உண்மையான உறவுகள்தேவைப்படுகின்றது. இவற்றைத்தொடர்ந்து செய்யும் போது எமது மனம் ஊக்கம் பெறும்.



**அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)**

### 1. திறந்த மனப்பான்மை:-

எமது மனச்சான்றினைத் தொட்டு, நாம் செய்யும் ஒவ்வொரு செயற்பாடுகளும், நிகழ்வுகளும் சந்திக்கும், நபர்களும், எமக்கும் பிறருக்கும் இடையே மகிழ்வினை, தனித்துவத்தை விட்டுக்கொடுத்தலை அன்புப் பகிர்தலை உணர வைப்பதனை நாம் உணர்தலைக் குறிக்கும்.

### 2. புலன் உணர்வுகளின் தன்னுணர்வு:-

எமது புலன் தரும் தரவுகளை சுய சிந்தையோடு எமது உள்ளத்தில் பதிவு செய்தலாகும். ஏனெனில் உடலினில் பாதி, உள்ளத்தினில் பாதி புலனில் இருக்கிறது. புலன் உணர்வுகளின் தன்னுணர்வே அனைத்து மனக் குழப்பங்களிற்கும் காரணமாகின்றது. நமது உணர்ச்சிகளுக்கு நாம் அடிமையாகாமலும் அவற்றை நாம் அடிமைப்படுத்தாமலும் சிந்தனைகளைச் சீராக்கி உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் எமது உள்ளத்தில் புத்துணர்வு ஏற்படுவதை உணரலாம்.

### 3.மீளாய்வு

புதிய நோக்கில் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் உந்து சக்தி ஒவ்வொரு நாளின் இறுதிக்கட்டத்தில் மீள் மதிப்பீட்டிற்காக ஒதுக்கப்படும் நேரத்திலிருந்தே கிடைக்க முடியும். அத்துடன் நடைமுறை வாழ்க்கையில் எதிர்பாராமல் கிடைக்கும் நேரங்களையும் சக்தி சேமிப்பு நேரங்களாகப் பயன்படுத்தி புதிய சிந்தனைகளை உருவாக்க வேண்டும்.

### 4. ஓய்வு

எந்நேரமும் பரபரப்புடன் இயந்திரம் போலச் செயற்படுதல் நலிந்த மனிதத்துவத்தையே தோற்றுவிக்கும். பதட்டமான மனநிலையை நீக்கி அமைதியான மனநிலையை உருவாக்க ஓய்வு அவசியமாகின்றது.

### 5. உண்மையான உறவுகள்

நம்மை விளங்கிக் கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் உண்மையான உறவுகள் இருக்கிறார்கள் என நாம் உணரும் போது எம்மை நாம் யதார்த்தமாக ஏற்றுக் கொள்ள முடியும். நம்பிக்கைக்குரிய நண்பர்களுடன் உறவாடும் போது எமது உள்ளத்தின் ஆழத்திலுள்ள ஏக்கங்கள், கவலைகள், தேவைகள் பிரச்சினைகளை இனங்கண்டு வார்தகை வடிவில் பகிர்ந்து கொள்கின்றோம். எமது மனதிலும், உள்ளத்திலும் நேரான விழுமியங்கள் ஏற்பட இது வழிவகுக்கும். அன்பான உறவுகளால் ஏற்படுத்தப்படும் ஊக்கப்படுத்தல் எமது வாழ்வில் உளச் சமநிலையை ஏற்படுத்தும். இதற்கு எமது உண்மையான பகிர்தலும், உறவுகளில் ஏற்படும் நம்பிக்கையும் அவசியமாகும்.

இத்தகைய படிமுறைகளினால் நாம் எமது வாழ்வைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் போது எண்ணங்களிலுள்ள எதிர்மறையான சிந்தனைகள் நீக்கப்படுவதோடு எமது உள்ளமும் ஊக்கம் பெற்று வாழ்வினில் புத்துணர்வு ஏற்படும்.

நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை எந்த மனநிலையில், எப்படி ஏற்றுக் கொள்கின்றோம் என்பதில் தான் எமது மன மகிழ்ச்சி தங்கியுள்ளது. வாழ்வினில் ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றைக் கண்டு தப்பியோடாது அவற்றை முகங்கொடுத்து வெற்றி கொள்வதே வாழ்க்கைக்கு புதுத்தெம்பைக் கொடுக்கும் பிறரன்பு, இறைசிந்தை, கனிவு, கருணை, அக்கறை என்பவை உள்ளத்திற்கு உரமாக அமையும் போது மனித மனங்கள் நிறைவான மகிழ்வுடன் மலருகின்றது.

*“விதி ஒரு கதவை மூடுகின்ற போது<br>நம்பிக்கை இன்னொரு கதவைத் திறக்கின்றது”*

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

**04**

**நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்த தன் பின்பு, பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.**

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*



**1.9 ஐந்து நிலைகளில் புதுப்பிக்க முயலுவோம்.**

5. நான் கற்பனை இறையியல் (speculative, scholastic theology) மாத்திரம் செய்ய விரும்பவில்லை. சிந்தனை - இறையியலாக்கத்தில் நின்றுவிடாது எனது வாழ்வில் பின்னிப்பிணைந்து எனது சிந்தனை செயல்களைத் தூண்டியவைகளைத்தான் பட்டறிந்தவைகள் என்று கூறுகின்றேன். நான் பார்த்தவை கேட்டவை பல. ஆனால் இங்கே நான் வாழ்வில் விலை கொடுத்து அனுபவித்தவைகளையே பட்டறிவு என்று வைத்து ஒரு அனுபவ இறையியலாக்கம். (experiential theology) செய்யத் துணிகிறேன்.

எனது அழைத்தலிலும் இறையியல் செய்வதிலும் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றியதிலும் ஆபிரிக்கா -தென்அமெரிக்க - ஆசிய இறையியலாளர்களுடன் கொண்ட தொடர்புகளிலுமிருந்தும் கற்றுக் கொண்டவைகளை பல எதிர்ப்புகள் துன்பங்களுக்கு இறை அருளுடன் முகங் கொடுத்து உரையாடலிலும், என் கருத்திற்காக வாதாடுவ திலும் எனது உறுதியை பெலப்படுத்திக் கொண்டேன். (conviction through suffering, discussion, debate and defence) இக்காரணங்களுக்காக இடைக்கிடையே எனது வாழ்வில் எடுத்த முடிவுகளையும் செயல்களையும் தாக்கங்களையும் இங்கே குறிப்பிடு கின்றேன்.

இன்று நான் மகிழ்ச்சி அடைவதன் காரணம் என்னவென்றால் ஆசியத் திருஅவைகள் எனது கருத்துக்களை வரவேற்ற போதிலும் இயேசுவைப் போல் உரோமைத் திருஅவை அதி காரிகளினால் நான் சந்தேகத்திற்கும் எதிர்ப்புக்கும் உள்ளா னேன். ஆனால் இறைவன் தன் இறையரசுத் திட்டத்தில் இன்னும் என்னைக் கத்தோலிக்க திருஅவைக்குள் வைத்து மக்கள் மத்தியில் ஒரு கருவியாக வழிநடத்துகிறார்.

தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் திருஅவைகளுக்கும் இப் பணியை உரிய முறையில் செய்ய இறைவன் எமக்கு அருள் தருவாராக!

## அத்தியாயம் 2

### இறை வெளிப்பாடுகள், மதங்களின் தோற்றம், இந்து சைவ மார்க்கத்தில் தமிழர் வாழ்வு

2.1 வியப்பில் தவித்த மனிதனுக்கு இறைவன் தாமே தம்மை வெளிப்படுத்தினார்.

அனைத்துப் படைப்புகளையும், அவைகளின் அழகையும் ஒழுங்கையும் கண்டு, மனிதன் வியப்படைந்தான். அவனது ஐம்புலன்களினால் விளங்கவோ விளக்கவோ அவைகளின் காரண கர்த்தாவை அறியவோ முடியாது தவித்தான். இந்தத் தேடல் நிலையில் தான் அன்பும் இரக்கமுமான இறைவனே, தம்மைச் சகல மனிதருக்கும் வெவ்வேறு விதமாக, அவர்களுக்குத் தாம் கொடுத்த இன மொழி, கலை, கலாசார, சூழலில், அறிகுறிகள், ஞானிகள் ஊடாகத் தம்மை வெளிப்படுத்தினார். இந்த அறிகுறிகளை ஆதாரமாகக் கொண்டு, மக்கள் தமது சூழலில் அந்த இறைவனை வெவ்வேறு வழிபாடுகள் செபங்கள் ஆலயங்கள் வழியாக வழிபட்டனர். இவைகள் அவர்களுக்குரிய மதங்களாக வளர்ந்தன. உலகின் வெவ்வேறு பாகங்களில் மனித வாழ்வு தோன்றிய காலம் தொட்டு, சிருட்டிப்பின் சிகரமாக வாழ அழைக்கப்பட்ட மனி தன் தனது ஐம்புலன்களையும் பயன் படுத்தி வாழ்ந்தான். அனைத்தையும் அனுபவித்து வாழ்ந்தவன், காரண கர்த்தாவை வியப்பிலே தேடினான்.

இந்நிலையில்தான் இறைவன் தம்மை வெவ்வேறு வழியாக வெளிப்படுத்தினார். அவைகளை ஆதாரமாக வைத்து, மனிதன் இறைவனோடு தொடர்புகொண்டான். போற்றுதல், வேண்டுதல், நன்றி கூறுதல்.. இம் முயற்சிகள் வளர்ந்து மதங்களாக - இறைவனையும் மனிதனையும் இணைக்கும் மத அமைப்புகளாக உருவெடுத்தன.

(தொடரும்...)

# காவலன் கலசம்

# கார்மேல் அன்னையும் உத்தரியமும்

**அருட்சகோதரி மேரி ஹென்றியேல் அ.கா**

அழகானதும் அனைத்திலும் மேலானதும், கார்மேலின் செல்வங்கள் அணையாது ஒளிர்வது அன்னை மரியாளில்.

மத்தியதரைக் கடலின் அயர்வுறா அலைகளின் ஆர்ப்பரிப்பை மறு ஒலிபரப்பும் மலையடிவாரம் பலஸ்தீன நாட்டின் பரமன்தந்த பாதுகாப்பு அரண். மணமக்களின் தலையென உன்னத சங்கீதத்தில் உரைக்கப்பட்ட இக் கார்மேல் மலையில்தான் அன்னை மரியா கார்மேல் சபையின் தலைவரான புனித சைமன் ஸ்ரொக் என்பவருக்குக் காட்சி கொடுத்தார். பல இன்னல்களுக்கு முகம் கொடுத்த இத் துறவிகள் விசுவாசத்தில் தளரா-மல் மரியன்னையை நோக்கி வேண்டிக் கொண்டனர். மரியன்னை “சைமன் ஸ்ரொக்குக்கு 1251 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆம் நாள் காட்சி அளித்து உத்தரியத்தை அவருக்குக் கொடுத்து, “மகனே! இதோ இந்த ஆடையைப் பெற்றுக்கொள். இது கார்மேல் சபையின் சின்னமாகவும், இதை அணிபவர்கள் அவரின் பிள்ளைகளாகவும் இருப்பார்கள். மரண வேளையில் இதனை அணிந்திருப்பவர்கள் நரக வேதனையிலிருந்து விடுவிக்கப்படுவர் என்றும் வாக்களித்தார்.

7 ஆம் கிளமென்ற் 11 ஆம் கிளமென்ற் என்னும் பாப்பரசர்கள் உத்தரியத்தை அணிவதால் ஆன்ம பலனை அடையலாம் என உறுதி கூறியுள்ளனர். அன்றுதொட்டு இன்றுவரை உத்தரியத்தைத் தமது ஆடையின் ஒரு பகுதியாகக் கார்மேல் சபைக் குருக்களும், கன்னியர்களும் அணிந்து வருகிறார்கள். துறவிகள் நாள்தோறும் காலையில் உத்தரியத்தை அணியும் போது “சுமை சுமந்து சோர்த்திருப்போர் அனைவரும் என்னிடம் வாருங்கள், உங்களை நான் இளைப்பாற்றுவேன்” என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளை ஞாபகப்படுத்துகின்றனர்.

ஒவ்வொரு நாளையும் இறைவனிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பரிசாகவும், அன்று செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவனிடம் செல்லும் வழியாகவும் ஏற்றுக்கொண்ட அவர்கள் உத்தரியத்தை அணிந்த நாள் முதல் இறைவனின் அடியார்களாகவும், பணியாளர்களாகவும் தங்களை ஏற்றுக்கொண்டனர்.

இக் கார்மேல் மலையில்தான் இறைவாக்கினர் எலியாஸ் கடும் தவம் செய்து, இஸ்ராயேல் மக்களின் உயிருள்ள இறைவனிடம் கொண்ட ஆழமான விசுவாசத்தின் தூய்மையைக் காப்பாற்றினர். கார்மேல் சபையில் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கன்னியர்கள் தமது வாழ்வின் ஆழமான அன்பைக் காட்ட ஆழ்ந்த செபத்திலும் தியானத்திலும் தமது வாழ்வை அர்பணித்துள்ளனர்.

மரியாளைத் தமது பாதுகாவலியாகவும், வழிகாட்டியாகவும், அரசியாகவும் ஏற்று வாழ்கின்றனர். ஒவ்வொரு கார்மேல் சபைத் துறவிகளும் மரியாயி-டம் காணப்படும் புனிதத் தன்மைக்கும், அர்ப்பண வாழ்வுக்கும் அடையாளமானவர்களென பாப்பரசர் பன்னிரெண்டாம் பத்திநாதர் கூறுகிறார்.

நாமும் மரியன்னையில் எமது விசுவாசத்தைக் கட்டியெழுப்ப தப முயற்சிகள், குடும்ப செபமாலை பக்தி எமக்கு அவசியம். இன்று பாவ அக்கிரமம் நிறைந்து உலகம் சீரழிந்து வரலாறு காணாத முறையில் தீராத வியாதிகளால் முற்றும் பாதிக்கப்பட்டவர்களாய், தங்கள் ஆன்ம வாழ்வுக்கு சாவுமணி அடித்து விட்டு இறை-வனைக் கைவிட்ட பரிதாப நிலை. மனித சமுதாயம் தானே உண்டாக்கிக் கொண்ட இந்தச் சீர்கேட்டினைப் புரிந்து கொண்டு, கடவுள் பக்கம் திரும்பினால் மட்டுமே எமக்கு விமோசனம் உண்டு. நம் இதயத்தின் பகைமை உணர்வு, சண்டை, சச்சரவு, பழிவாங்கல் நீங்கி, மனித நேயம் பொங்கி எழ எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது மன்னித்து, மறந்து வாழக் கற்றுக்கொள்வோம்.



இன்று உலகை எல்லாம் உலுப்பி வரும் கொரோனா என்னும் கொடிய வைரசின் தாக்கம் முடிவுக்கு வர அன்னையை நோக்கித் திருச் செபமாலையைச் செபிப்போம். மரியன்னையின் வல்லமையுள்ள பரிந்துரை எமக்குக் கிட்ட, வாழவு என்னும் சமுத்திரத்தின் அலைகளால் நாம் அடிபடும்போது வாழ்வின் அரசியாம் மரியன்னையை நோக்கிக் கூவி அழைப்போம். மரியாள் நமக்கு ஓர் வழிகாட்டும் விண்மீன் போன்று திகழ்கின்றார். மரியே என்னும் நாமம் எப்பொழுதும் எம் உதடுகளில் இருக்கட்டும். நம் உள்ளங்களில் இருக்கட்டும். அப்போது பரலோக, பூலோக அரசியாம் மரியாள் எம்மைத் தம் வழி நடத்திச் செல்வார்.

ஒவ்வொரு ஆண்டும் திரு அவையானது யூலை மாதம் 16 ஆம் திகதி கார்மேல் மாதாவின் சிறப்பு நாளாக நினைவு கூர்கின்றது. நம் இலங்கையில் பல்வேறு மாகாணங்களில் வாழும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையானது கார்மேலின் மூன்றாம் சபையாகும். இச்சபையானது ஏழை மக்களின் கல்வி வளர்ச்சிக்காக இந்தியாவில் ஆயராகப் பணியாற்றிய மாறி எப்ரோம் பணிப்புரையின் பெயரில் பிரான்ஸ் பயோன் நகரில் 1868 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆம் திகதி “சிறுகார்மேல்” என்னும் பெயரில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அன்னை வெரோணிக்காவினால் உருவாக்கப்பெற்று 1870 ஆம் ஆண்டில் இந்தியா மங்களூர் புனித அன்னம்மாள் தலைமை மடத்தில் வரவேற்கப்பட்டு, இன்று பெரும் விருட்சமாக உலகின் பல பாகங்களிலும் சிறந்து விளங்குகின்றது.

இலங்கையில் 1922 ஆம் ஆண்டு மாசி மாதம் 5ம் திகதி அதி வண. ஆயர் கஸ்ரன் றொபிசே (இயேசு சபை) பணிப்புரையின் பெயரில் திருகோணமலைய-ில் முதல் முதலாக ஆரம்பமானது .இலங்கையில் பல பாகங்களிலும் கல்விப் பணியோடு கூடிய சமூகப் பணிக-ளில் ஈடுபட்டு வருகின்றது.

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ஆம் நாள் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர் இலங்கையில் நூற்றாண்டுக்கான ஆயத்தங்களை ஆன்மீக ரீதியாக மேற்கொண்டு வருகின்றனர். இறைவன் இச் சபைக்குச் செய்த அளப்பரிய பெரும் ஆசீர்வாதங்களுக்கும் வழி நடத்தலுக்கும் இறைவனுக்கு நன்றி கூறுவதோடு, இச் சபையின் வளர்ச்சிக்காகக் கைகொடுத்து உழைத்த சபையின் அனைத்துத் தலைவர்கள், அருட் சகோதரிகளுக்காகவும் என்றும் இறைவனுக்கு நன்றி நவில்வதோடு, எமது ஸ்தாபகர் அன்னை வெரோணிக்காவின் புகழ் ஓங்க, இச் சபையானது மேலும் வளர்ச்சியடைய இறைவன் கரம் எம்மை வழிநடத்த இறைவனின் அருளை வேண்டுகிறோம்.

உத்தரிய அன்னையின் உத்தரியத்தை அனை-வரும் அணிந்து அதன் மகிமையை உங்கள் வாழ்வில் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னையின் மேலான பண்புகளான தூய்மை, அன்பு, தாழ்மை, செபப்பற்று உங்கள் இதயங்களில் மலர செபமாலைப் பக்தியுடன் கூடிய உத்தரியத்தை அணிந்து நித்திய மோட்சம் அடையவும், அன்னை மரியின் பரிந்துரையால் கொடிய கொரோனா நம் நாட்டில் நின்றும் உலகில் நின்றும் விடுதலை பெற அன்னையின் கரத்தைப் பற்றிக் கொள்வோமாக. செபமாலை என்னும் ஆயுதத்தைக் கையில் ஏந்தி நாள்தோறும் செபிப்போமாக.

## முகக்கவசங்கள்



உயிராய் நேசித்தேன் என் உற்ற நண்பனை
உண்மையாய் நேசித்தேன் என் உற்ற உறவினனை
உன்னதமாய் நினைத்தேன் இவர்களின் உறவினை
உடனடியாகத் தெரியவில்லை இவர்களின் முகக்கவசங்கள்

என் உறவினர்கள் தான் முகக்கவசங்கள்
அணிகின்றனர் என்று எண்ணினேன்
எல்லா இடங்களிலும்
முகத்தை மறைக்கும் முகக்கவசங்கள்
எந்த மனிதனிடம் முகக்கவசம் இல்லை எனத் தேடினேன்
எங்கும் முகத்தை மறைக்கும் முகக்கவசங்களே!

அரசியலில் தேடிப் பார்த்தேன்
அங்கே முகக்கவசம் இல்லாத முகம் இருப்பதா என
அங்கும் அயல் இனமக்களுக்கு செய்யும் அநீதி
அயல் நாடுகளுக்குத் தெரியக்கூடாதென
அணிகின்றனர் முகக்கவசம்

சேவை செய்யும் அதிகாரிகளிடம் தேடினேன்
உண்மை முகம்
சேர்க்கின்றனர் அடுத்தவர்களின்
தேவைக்கான பணத்தை
சேர்த்தது தெரியக் கூடாதென
சேவை செய்கிறோம் என அவர்களும்
அணிகின்றனர் முகக்கவசம்

நீதியைத் தரும் நீதிமன்றத்தில் தேடினால்
நீதியானதொரு உண்மை முகம்
கிடைக்குமென எண்ணினேன்
நீதியை வழங்கும் நீதிபதிகளே
நீதியற்ற முறையில் அணிகின்றனர் முகக்கவசம்

இவர்கள் தான் முகக்கவசம் அணிகிறார்கள் என்றால்
இலவசக் கல்வியைத் தரும் ஆசிரியர்களும்
இருப்பவனுக்கு ஒருவாறு இல்லாதவனுக்கு ஒருவாறென
இவர்களும் அணிகின்றனர் முகக்கவசம்

முகக்கவசம் இல்லாத முகங்களைத் தேடினேன்
முடியவில்லை என்னால்
முகத்தின் மேல் ஒரு முகக்கவசம் - அம்
முகத்திற்கு மேல் கொரோனாவுக்கென
இன்னொரு முகக்கவசம்

எப்படித்தான் கண்டுபிடிப்பேன்
எவ்வாறு தான் கண்டுபிடிப்பேன்
எப்போதும் முகக்கவசம் அணியாத முகங்களை!!!

**அ.ஆகாஸ்**
**தரம் - 12**
**புனித மடுத்தீனார் சிறிய குருமடம்**



## கொரோனாவை கொள்ளையடிப்போம்

2020 இல் ஒழிவாய் என நினைத்தோம் - ஆனால்
விஸ்வரூபம் எடுத்து வந்தாய் 2021 இல்
பசி கொண்ட புலியாய் வெறி கொண்ட சிங்கமாய்
மானிட குலத்தையே சூறையாடி வந்தாய் வருகிறாய்

அப்பாவி மக்கள் வாழ்வில்
கரியைப் பூசி வாழ்வையே பாழாக்குகின்றாய்
வல்லரசு நாடுகளில் கூட - உனது
ஆதிக்கத்தைச் செலுத்தி ஆட்டிப்படைக்கிறாய்

உன்னை அழிக்க எத்தனையோ பேர் முயற்சி செய்தாலும்
உன் உருவத்தை மாற்றித் தப்பித்து விடுகின்றாய்
ஆனால் இனி உன்னால் தப்பிக்க இயலாது
உன்னோடு இருந்து 2 வருடங்கள் ஆயிற்று

உன்னை அழிக்க மானிட குலம் வழி தேடிற்று
உன்னைக. கொல்ல இயலாது ஆனால் துரத்தியடிக்க
முடியும் - எனவே
நாம் கைகழுவுவோம் சமூக இடைவெளி
பேணுவோம், முகக்கவசம் அணிவோம்
கொரோனாவைக் கொள்ளையடிப்போம்

நாம் தமிழர் தமிழ் பழைய பாரம்பரியத்தைக்
கடைப்பிடித்தாலே போதும் கொரோனா விலகும்
ஆலோசனைகளையும் பாரம்பரியத்தையும்
பேணுவோம்
கொரோனாவைக் கொள்ளையடிப்போம்.

**அ. அருள்வளம்**
**தரம் - 9**
**புனித மடுத்தீனார் குருமடம்**

# மல்லிகா மிஸ் என்ற ஓர் அற்புதப் பிறவி

## நீத்தார் நயப்புரை

அன்பாகப் பண்பாகப் பழகும் சுபாவமும், எடுத்த காரியத்தை செவ்வனவே நிறைவேற்றும் செயல்திறனும், நிறைவான கற்பித்தல் திறனும், விளையாட்டில் வீர மங்கையுமான திருமதி மேரி மல்லிகா ஜோண் அரியதாஸ் (மல்லிகா மிஸ்) கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி எம்மை விட்டு மறைந்து போனார்.

அவரது இறுதிச்சடங்கில் பத்திரிசிய சமூகம் உட்பட அவரது துணைவர் மற்றும் உறவுகள் கூடப் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டமை கொடுமையிலும் கொடுமை. எங்கே ஒரு கணம் மல்லிகா மிஸ் உடைய திருமுகத்தைப் பார்த்து விட முடியாதா என்று நாம் தவித்த தவிப்பு, நெஞ்சப் பதறல் இப்போது நினைத்தாலும் மெய்சிலிர்க்கின்றது.

அவரது உயிரற்ற உடல் வெள்ளைத் துணியால் சுற்றப்பட்டுக் கொண்டு வரப்படுவதையும், பேழைக்குள் வைக்கப்பட்ட உடல் வாகனத்தில் ஏற்றப்படுவதையும், பேழை தகனம் செய்யும் பொறிக்குள் வைக்கப்படுவதையும், அவரது அஸ்தி குருவானவரால் ஆசீர்வதிக்கப்பட்ட பின் சேமக்காலைக்குக் கொண்டு சென்று புதைக்கப்படுவதையும், துண்டு துண்டுக் காட்சிகளாகக் காணொளியில் பார்த்து எங்கள் மனமும் துண்டு துண்டாகச் சிதறியது .. கதறினோம்.

மல்லிகா மிஸ்ஸின் மறைவிற்காக அஞ்சலி செலுத்தும் முகமாக எமது பாடசாலையின் (புனித பத்திரிசியார் கல்லூரி) சிற்றாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இரங்கல் உரைகளும் வழங்கப்பட்டன. மல்லிகா மிஸ்ஸின் இறுதிப்பயணம் ஆலய மணி ஒலிக்க, செபங்கள் திருப்பாடல்களுடன் பத்திரிசியார் கொடி போர்த்தப்பட்டு சோகமே சூழ நடைபெற்றிருக்க வேண்டிய நிலையில் ஏகாந்தமாகத்திருவுருவப்படத்தைப்பார்த்த வண்ணம் இணைய வழியில் (Zoom ஊடாக) இரங்கற் திருப்பலி நிறைவேறியது. குருக்கள், துறவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், புலம்பெயர் மாணவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கண்ணீர் சிந்த உருக்கமான வேண்டுதலுடன் இணைய வழியில் இணைந்திருந்தனர்.

மல்லிகா என்ற மங்கை ஓர் அற்புதப்பிறவி. தன்னலமற்ற, பல்துறை ஆளுமை கொண்ட ஓர் எளிமையான, எடுத்துக்காட்டான அர்ப்பணமுள்ள குடும்பத் தலைவி. அவரது உரையாடலில் எப்போதும் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமே வெளிப்படும். அத்தகைய பல்வேறுபட்ட குணநலன்கள், ஆற்றல்கள், திறமைகள் என்பன எம்மை மட்டுமல்லாது அவரை, அறிந்தவர்கள், அவருடன் பழகியவர்கள் என யாவரையும், வெகுவாகக் கவர்ந்து கொண்டதில் வியப்பில்லை.

பாடசாலையில் அவரது கற்பித்தல் பணி சிறப்பானது. அவரது கணீரென்ற குரலும், பாடங்களுக்கு விளக்கமளிக்கும் ஆற்றலும் அனைத்து மாணவர்களையும் கட்டி வைத்திருக்கும். அவரது கற்பித்தலில் கிறிஸ்தவம் என்ற பாடத்தில் 'A' சித்தி (அதிவிசேட சித்தி) பெற்ற மாணவர்களே அதிகம். அதில் பலர் இன்று குருக்களாக பல மறை பணித்தளங்களில் பணியாற்றுகின்றார்கள்.

இவர் கற்பித்தல் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மிகுந்த ஆர்வமுடையவர். கல்லூரியின் தடகள விளையாட்டுப் போட்டிகளில் மல்லிகா மிஸ்ஸின் செயற்பாடு அபரிமிதமானது. இல்ல அலங்கரிப்பு மற்றும் அணி நடைப் போட்டியில் மல்லிகா மிஸ்ஸின் கைவண்ணமே ஓங்கி நிற்கும். அணிநடையின் போது பிரதம விருந்தினருக்கு 'சல்யூட்' (Salute) மரியாதை செய்யும் முறையை எமது கல்லூரியில் அறிமுகப்படுத்திய பெருமை மல்லிகா மிஸ்ஸையே சாரும். மேலும் அவர் ஆசிரியராக எமது கல்லூரியில் பணியாற்றத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நடித்து பல இடங்களில் மேடையேற்றப்பட்ட "மண் சுமந்த மேனியர்" என்ற நாடகத்தை எமது கல்லூரி மாணவர்களைப் பயிற்றுவித்து மேடையேற்றிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றவர்.

இவர் யாழ் பல்கலை கழகத்தில் கல்வி பயின்ற காலத்தில் வலைப்பந்து, கூடைப்பந்து, தடகளப் போட்டி, ஹொக்கி போன்ற விளையாட்டுக்களில் பங்குபற்றியிருந்தார். அணித்தலைவியாக விளங்கி அவற்றைச் சிறப்பாக வழி நடத்தியவர். அணியின் வெற்றிக்காகக் கடினமாகப் பாடுபடுவார். அவருக்கு நிறையத் தாங்குமியல்பு (Endurance) உண்டு. இதனால் தான் என்னவோ அவருடைய வாழ்க்கையில் பல சவால்கள், சோதனைகள் குறிப்பாகப் பல இடப்பெயர்வுகள், வீடு வாசல் மற்றும் சொத்து இழப்பு ஏற்பட்டபோதும் அவற்றை எதிர்கொண்டு அவற்றையும் கடந்து வாழ்க்கையை நடாத்துவதற்கான மனோ வலிமையைப் பெற்றிருந்தார்.

**எஸ்.சகாயராஜா**
**ஓய்வுபெற்ற ஆசிரியர்-பிரதி அதிபர்**
**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

எமது ஆசிரியை ஓய்வு பெற்ற பின்னரும் கூட பாடசாலை நிகழ்வுகளுக்கும் ஆசிரியர்களின் இன்ப, துன்பங்களிலும் தவறாது கலந்து கொள்வார். தேவையான உதவிகளும் செய்வார். இதனால் எல்லோராலும் விரும்பப்படும் ஓர் ஆசிரியராகத் திகழ்ந்தவர். இவ்வாறான ஓர் நல்லாசிரியரின் சடுதியான மறைவு தாங்க முடியாதது. எனினும், மல்லிகா மிஸ்



என்ற அற்புத ஆளுமை என்றோ ஒரு நாள் எம்மோடு வாழ்ந்து முடிந்து போன ஒருவரல்ல. மாறாக அவர் இன்னும் எம்மோடு உறவாக, நட்பாக, நினைவாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

**எமது அன்பான மல்லிகா மிஸ்!**
**அமைதியில் நாம்**
**உம்மைத் தியானிக்கையில்,**
**நாம் விம்முவதைப்**
**பிறர் அறியாவிட்டாலும்**
**எப்போதும் உம் நினைவு**
**எம் மனதில் பேணப்படும்**
**உடன் பிறவா அன்புச் சகோதரியே**
**அமைதியில் இளைப்பாறுங்கள்**




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: கொஞ்ச நாட்களாக உங்களுடைய கேள்வி பதிலைப் படிக்காதது ஏதோ பெரிய கொடைகளை வாழ்க்கையில் இழந்ததுபோல் இருக்கின்றது! ஏன் அப்படி?**

ப: ஐயோ என்னைப் புகழாதேயுங்கோ அருள்! நிற்க, விருப்பமானவை விருப்பமான நேரத்தில், கட்டத்தில் கிடைக்க வில்லை என்றால் மனம் அப்படித் தான் உணரும். நாட்கள் செல்லச் செல்ல நலமாகி விடுவீர்கள்.

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: பொருளாதார நிலைமைகள் மிக மோசமான நிலையை அடைந்து கொண்டிருக்கும் நிலையில் நம் நாடு போகின்ற போக்கில் இனிமேல் பிச்சையெடுக்க வேண்டித்தான் வரும் போல தெரிகின்றது! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: ஆனந்தன், நினைக்க என்ன இருக்கின்றது! இனிமேல் என்ன, ஏற்கனவே எடுக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா!?

(விஜி, யாழ்ப்பாணம்)

**கே: கொரோனாவின் பரவலைத் தடுப்பதற்காகப் போக்குவரத்துத் தடை என்று குறிப்பிட்ட சில நாட்களில்தான் அதிகமான வீதி விபத்துக்கள் நடந்திருப்பதாகத் தகவல்! இது எதனைக் காட்டுகின்றது?**

ப: விஜி, எவ்வளவு கவனமாகவும் அவதானமாகவும் வீதிகளில் நம்மவர்கள் பயணிக்கின்றார்கள், வாகனத்தைத் செலுத்துகின்றார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது! அத்துடன் சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கின்றது என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றது. வீதியில் பலரின் விதி எழுதப்பட்டிருப்பது பெரும் வேதனைக்குரியது!

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்கின்றார்கள்! நீங்கள் இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: நினைக்கிறதுக்கு என்ன இருக்கு யோசப்! நூற்றுக்கு நூறு வீதம் உண்மை! இதனைச் சில நாள்களுக்கு முன் வந்த எஸ்எம்எஸ் ஒன்று உறுதிப்படுத்துகின்றது! மனைவியரில் பொதுவாக இரண்டு வகை உண்டு. கணவன் சொல்வதைக் கேட்டு நடப்பவர்கள் முதல் வகையினர். அதாவது, கணவன் எவ்வளவுதான் கோபப்பட்டாலும் ஒரு புன்னகையில் மறந்து விடுபவர்கள், ஒருபோதும் அவர்களைக் குறைசொல்ல மாட்டார்கள். இரண்டாவது வகையினர், இப்போது உங்கள் எல்லாருக்கும் அமைந்திருக்கின்றதே! அதுதான் இரண்டாவது வகை! எப்படி இருக்கின்றது யோசப் விளக்கம்! இதனைக் கண்டு பிடித்தவன் மகா கெட்டிக்காரனாக இருக்க வேண்டும். அல்லது வீட்டில் நல்ல அடி வாங்கியிருக்க வேண்டும்.

(சுதன், யாழ்ப்பாணம்)

**கே: பதவியில் இருந்து அதிகாரம் காட்டியவர்கள் அப்பதவியிலி ருந்து இறங்கியதும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்றே தெரியாத நிலையில் இருக்கின்றார்களே!ஏன்!**

ப: கட்டியிருக்கும் கோவணத்தை யாராவது கழற்றி விடுவார்கள் என்ற பயத்தில்தான்!

(அன்ரன், மன்னார்)

**கே: சலுகைகளைப் பெறச் சிலர் அடிமைகளாக மாறிவிடுகின்றார்களே! யார், எவர் என்றுகூடப் பார்க்காமல் தமக்குத் தேவையானவைகளைப் பெற்றுக்கொள்கின்றார்களோ! எப்படி?**

ப: அன்ரன், நக்குகின்ற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன! எல்லாம் ஒன்றுதான்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

# அடையாளம்



## ஓர் உளவள ஆன்மீகப் பார்வை

கரைவையூர்ச் செல்வம்

ஆண்கள் தங்கள் மேலுடையில் (Shirt) வலதோ இடதோ பக்கத்தில் உள்ள கொளரை இரு கைவிரல்க ளால் மேலே இழுத்துவிட்டு, ஓர் ஏளனச் சிரிப்புடன், வீர நடைதேடுவது தங்கள் அடையாளம் என்று தமிழ்த் திரையின் முன்னணி நடிகர்கள் சிலர் சொல்வதை அவர்களுடைய ரசிகப் பெருமக்களும் ஏற்றுக்கொண்டு விசிலடித்து ஆர்ப்பரிப்பதை இந்த 21ம் நூற்றாண்டிலும் நாம் பார்க்கின்றோம். இது தமிழ் திரைப்படங்களின் முன்னேற்றமா அன்றேல் தேக்கமா அன்றேல் பின்ன டைவா என்பது விவாதத்திற்குரியது. மேற்கொண்டு எழுது முன்னர். தமிழ்த் திரைப்படங்களில் பயங்கரவாத வன்செயல்களும், குடிப்பழக்கமும் புகைத்தலும் என்றும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளமை எதிர்காலத் தமிழர்களுக்கு ஓர் அழிவுப் பாதையையே காட்டுகின்றது. இதில் உள்ள விசித்திரம் என்னவென்றால், துவக்கத் திலேயே சொல்லுகிறார்கள். "மது அருந்துவதும், புகைத் தலும் நோய்களைக் கொண்டு வரலாம்" பின்னர் சொல்லுகிறார்கள் "உங்கள் அப்பாவிக் குழந்தைகளுக்கு இதை எடுத்துச் சொல்லுங் கள்" யார் சொல்வது? எப்படிச் சொல்வது? அதாவது இது தவறு என்று சொல்லிவிட்டு அதே தவறைப் திரைப்படம் பூராகக் காட்டுவதை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள் தயாரிப்பாளர்கள். இது அடையாளமா? அன்றேல் அடை யாளக் குழப்பமா? இதைத் தட்டிக் கேட்க இந்தியாவில் யாருமே இல்லையா?

### அடையாள அட்டை

அடையாளம் என்ற சொல் மலிவாகவே பழக்கத் திலும் வழக்கத்திலும் வந்துள்ளது. அடையாளமென்றால் என்ன? ஆங்கிலத்தில் இதை Identity என்று அழைக்கி றார்கள். அதாவது எனது பெற்றோர் பேசிய மொழி எனது பெற்றோரின் கலாசாரம் அவர்களுடைய நாடு, அவர் களுடைய மதம் முதலானவற்றை பின்புலமாகக் கொண்டு, ஒரு தனி நபரின் அடையாளத்தைக் குறிப்பிடுகின்றோம். இந்த அடையாள அட்டை ஏதோ ஒரு வகையிலே எல்லா நாடுகளிலும் அவசியமாகின்றது. இவற்றை மையப் படுத்தியே தேசிய அடையாள அட்டைவிநியோகிக்கப்படு கின்றது.

நான் பயணங்களை மேற்கொள்ளும்போது அல்லது எந்தவொரு அலுவலகத்துக்கு எனது தேவைநோக்கிச் செல்லும் பொழுது இந்தத் தேசிய அடையாள அட்டை தேவைப்படுகின்றது. அதுவும் இராணுவ மயமாக்கப் பட்ட நாடுகளில் இந்தத் தேசிய அட்டையின்றி எதையுமே ஒருவர் செய்ய முடியாது. தனது வீட்டுக்குள் இருப்பினும், இராணுவத்தினரோ அன்றேல் காவல் துறையினரோ ஒரு தனிநபருடைய வீட்டிற்குள் வந்து அவருடைய தேசிய அடை யாள அட்டையைக் கேட்கிறார்கள். இல்லையென்றால் கைது. ஈழம்போன்ற ஒரு நாட்டில் இந்த அடையாளச் சீட்டு இல்லையென்றால் பயங்கர வாதச் சட்டத்தின் கீழும் கைதுசெய்யப்படலாம். இந்த அடையாளச் சீட்டின் முக்கியத்துவத்தை அழுத்திக் கூற விரும்புகின்றேன்.

### பெரியப்பாவின் குழப்பம்

இதையெழுதும் பொழுது, ஒரு குருவானவர் கூறிய நிகழ்வொன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அது ஈழத்து நீடிய போர்க் காலம். ஒரு கிராமம். கிராம மென்றால் ஒருவரையொருவர் நன்கு அறிந்திருப்பார் கள். ஓர் இயக்கத்தைச் சேர்ந்த போராளி காவல் அரணில் துவக்குடன் நிற்கின்றார். அவ்வழியோ போவோர் வரு வோரையெல்லாம் அவர்களின் தேசிய அடையாள அட்டை கேட்டு, அதை முன்னுக்கும் பின்னிற்கும் பார்த்தே அவன் பயணிகளை வெளியே செல்ல அன் றேல், கிராமத்துக்குள் வரவோ அனுமதி அளிக்கின் றான். அப்பொழுது வரிசையில் வந்த ஒரு பெரியவரைப் பார்த்து அந்தப் போராளி சொல்கின்றான் "பெரியப்பா உங்கள் ID யை எடுங்கள்" பெரியப்பா பதிலுக்கு சொல்லு கிறார். "என்ன தம்பி? பெரியப்பா என்று அழைக்கிறாய். பின்னர் ID யைக் கேட்கிறாயே!" அதற்கு அந்தப் போராளி சொல்கிறான் "பெரியப்பா அது கிடக்கட்டும் இப்பொழுது ID யை காட்டுங்கள் இது, உண்மையில் நடந்ததோ, அன் றேல் இந்தக் குருவானவரின் கற்பனையோ தெரியாது. ஆனால் செய்தி தெளிவு. அதாவது ஆளை நன்கு அடை யாளம் காட்டினாலும் ID தேவை. இதைத் தான் சட்ட மனப்பான்மை என்று சொல்லுகின்றோம்

### .கடவுச்சீட்டு

இதேபோன்று நாட்டுக்கு நாடு பயணிக்கும் பொழுது, பயணிக்கும் பயணியின் கடவுச்சீட்டு (Pass Port) மிக அவசியம். இந்தக் கடவுச்சீட்டைத் தருவது அந்தந்த நாட்டு அரசுகள். கடவுச்சீட்டில் என்ன உள்ளன? பயணிப்பவரின் முழுப்பெயர் பயணிப்பவரின் பாலியல் அடையாளம், அவர் பிறந்த இடம், அவர் பிறந்த திகதி, கடவுச்சீட்டின் எண், பயணிப்பவர் எந்த நாட்டிற்குச் செல்லவிருக்கிறாரோ அந்த நாட்டிற்குள் செல்ல அனுமதி பெற்ற வீசா, இவையின்றிப் பயணிக்க முடியாது. இங்கு பயணிப்பவரின் கடவுச் சீட்டுத்தான் அடையாள அட்டை. ஆகவே, இந்த அடையாள அட்டையைக் கொண்டே என்னை அடையாளப்படுத்துகிறது சமுதாயம். இது நவீன நாகரீக வளர்ச்சியின் ஒரு கூறு.

அதேவேளை கள்ளக் கடவுச்சீட்டைப் பெற்று, இராணுவத்தினருக்கும், காவல்துறையினருக்கும், குடிவரவுத்துறையினருக்கும் கண்துடைப்புச் செய்து பயணித்தோரின் கதைகளும் ஏராளமாக உண்டு. ஏன் அரசுகளே கள்ளக் கடவுச்சீட்டைக் கொடுத்து தமக்கு வேண்டியவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியதும் புதிதல்ல. ஈழ நாட்டிலும் இது நடந்தது, எல்லோராலும் அறியப்பட்டது.

### இன்னுமோர் அடையாளம்

இது நாகரிகத்தின் ஒருபடி மேலுள்ளது. பலர் தங்கள் தொழிலால் தங்களை அடையாளப் படுத்துகிறார் கள். மருத்துவர்கள், சட்டத் தரணிகள், என்ஜினியர்கள், பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், ஆசிரியர்கள், முகாமையாளர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள், குருக்கள், ஆயர்கள், பிறிகேடியர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் என்று இந்தப் பட்டியல் நீளும். இவர்களுக்கெல்லாம், இவர்களுடைய பெயர்களை விட அவர்கள் சமூகத்தில் பெற்ற பதவி-களே முக்கியமாக இருப்பதால் அந்தப் பதவி களை வைத்தே தங்களை அறிமுகப்படுத்துவார்கள். இதை அவர்கள் விரும்புகிறார்கள். சமூகமும் அதை ஏற்றுக் கொள்ளுகின்றது.

இன்னும் பலர் தங்கள் கல்வித் தகைமை களை தங்கள் பெயருக்குப் பின்னாலும் அந்தத் தகை-மைகள் தந்த ஒரு கௌரவத்தைத் தங்கள் பெயர்களுக்கு முன்னாலும் காட்டுவதுண்டு. உ+ம் பேராசிரியர் குண்டோதரம், Ph. D.D. அன்றேல் கலாநிதி மண் டோதரி Ph. D.D.liff. அன்றேல் Dr. மணவாளன் M.B.B.S. F.R.C.S (Lon).

இன்னும் சிலர் குறிப்பாக ஓய்வு பெற்றவர்கள், முன்னைநாள் முதல்வர் "முன்னை நாள் வங்கி முகா மையாளர்" என்று கடந்தகாலம் சென்று கடந்தகால பதவியை வைத்தே தம்மை அடையாளப்படுத்துவார் கள். ஆனால், இன்று அவர்கள் கவலையில்லாப் பட்ட தாரிகள் அதுதான், யதார்த்தம்.

### ஒரு கேள்வி

உங்கள் பெயருக்கு முன்னால் உள்ள பதவி அடைமொழியையும், பெயருக்குப் பின்னால் உள்ள கல்வித் தகைமைகளையும் நீக்கி விட்டால், "நீ யார்?" இந்தக் கேள்வியால் திணறுவோர் பலர். கேட்கவே விரும்பாதோர் இன்னும் பலர். ஏன் அதே போன்று, உனது மொழியை உன்னுடன் நீ இணைத்துக் கொண்ட உனது இனத்தை, மதத்தை, நாட்டை உன்னி டமிருந்து பிரித்து விட்டால் (பிரிக்க முடியும்)"நீ யார்?" உண்மையாக நீ யார்?" மிகமுக்கியமான கேள்வி.

### பொய்யான அடையாளங்கள்

புறத்தில் இருந்து வரும் எதுவும், அனைத்தும் எனது உண்மையான அடையாளம் அல்ல. இவை போலியானவை, பொய்யானவை அவை ஒருவரை ஒரு மாயைக்குள் மறைத்துவிடுகின்றது. ஆயினும் நாகரீகம் என்ற போர்வையில் சமூகம் இந்தப் பொய்யானதையும், மாயையுமே விரும்புகின்றது. அது அவசிய தேவை யாகவும் பார்க்கப்படுகின்றது.புறத்தில் இருந்து வரும் அடையாளங்கள் என்னை வேறுபடுத்திக் காட்டுகின்றது. உயர்வு தாழ்வுகளைக் காட்டுகின்றது. ஆனால் புறத்தில் இருந்து வரும் அத்தனை அடையாளங்களும் ஓர் உளவள ஆன்மீகப் பார்வையில் பொய்யானவை.

### அடையாளமும் அடையாளப்படுத்தலும்

அடையாளமும் அடையாளப்படுத்தலும் ஒன் றல்ல. Identity and identification are different ஒருவர் ஓர் இனத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம்ஒருமொழியைப் பேசுபவராக இருக்கலாம். இதை, ஒரு Sent of belong-ing என்று கூறுவேன். இந்தக் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவன், இந்த மதத்தைச் சேர்ந்தவன். நான் தமி ழன் அல்ல, தமிழ் இனத்தைச் சேர்ந்தவன். நான் பௌத்தன் அல்ல, ஆனால் பௌத்த மதத்தைச் சேர்ந்த வன். நான் ஈழத்தவன் அல்ல ஈழ நாட்டைத் தாயகமாகக் கொண்டவன். இனத்துடன், மொழியுடன், மதத்துடன், நாட்டுடன் என்னை அடையாளப்படுத்தும் பொழுது, நான் என்னை இனத்துடன், மதத்துடன், மொழியுடன், நாட்டுடன் என்னைச் சமப்படுத்துகின்றேன். எனக்கும் எனது மொழிக்கும், எனது மதத்திற்கும், நியத்திற் கும், சாதிக்கும், நாட்டுக்குமிடையே ஓர் இருக்க வேண்டிய இடைவெளி இல்லாமல் போகின்றது.

இவ்வாறு அடையாளப்படுத்துவதினாலேயே வேறுபாட்டை வளர்க்கின்றோம். பகைமையை உருவாக்குகின்றோம். வன் செயலைத் தூ ண்டுகின்றோம். உலகளாவிய ரீதியில் கோடிக்கணக்கான மனிதர்கள் இந்த அடையாளப்படுத்தலினால் கொல்லப்பட்டிருக் கிறார்கள். இன அழிப்புகளும் நடைபெற்றுள்ளன. நடைபெறுகின்றன. நானே அந்த இனமாக, மொழியாக, மதமாக, நாடாக மாறுகின்றேன். இதனாலேயே அடிப்படை வாதங்கள் தோன்று கின்றன. வன்செயல்கள் உருவாகின்றன. போர்களே நடை பெறுகின்றன.

"நாம் தமிழர்" என்று மேடைகளில் உரக்கச் சொல்லி மக்களை உணர்ச்சிவசப்படுத்தலாம். ஆனால் இச் சொற்றொடர் அடிப்படையில் பிரிவினையை வளர்க்கும் முரணாக "நாம் மனிதர்கள்" என்று கூறும் பொழுது ஒற்றுமையை வளர்க்க வழியுண்டு.

"நாம் தமிழர்" என்ற கூற்று, மற்றவர்களைப் புறந்தள்ளுவது exclusive முரணாக, "நாம் மனிதர் கள்" எல்லோரையும் இணைப்பது inclusive "சிங்கள பௌத்தம்" என்ற அடையாளப்படுத்தலால், அடிப்படை வாதம் வளர்ந்து நாட்டில் ஏனயோரை புறந்தள்ளுகிறது. விளைவு, வன்செயல் மத மொழித் திணிப்பு "ஈழத் தமி ழர்" "இந்தியத் தமிழர்" என்ற அடையாளப்படுத்த லினால் வேறுபாட்டை வளர்ப்பது மட்டுமல்ல, ஒரு மொழி பேசு வோரையே பிரிக்கின்றது. பிரித்தோம் புறந்தள்ளினோம்.

### "பொக்குள் கொடி"

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த பொதுத் தேர்தலில் பெரும் வெற்றி பெற்று கட்சித் தலைவர் மு. ஸ்ராலின் முதலமைச்சரானார். தேர்தலில் மும்முரமாக பிரச்சாரம் செய்த ஸ்ராலின் அவர்கள் கொஞ்சம் இளைப்பாற முன்னரேயே, தேர்தல் வெற் றியை உள்வாங்கி தான்தான் முதலமைச்சர் என்ற யதார்த்தத்தை ஜீரணிக்க முன்னரே ஈழத்து நாள் ஏடுகளும், வார ஏடுகளும்" "பொக்குள் கொடி" பேச ஆரம்பித்துள்ளார்கள். தமக்கென்ற ஓர் அடையாள மில்லாமல் பொக்குள் கொடியில் அடையாளந் தேடுகிறார்களா? அன்றேல், ஈழத்து தமிழர்களின் உரிமைக்காக ஒரு வலுவான குரலாக புதுடெல்லி ஆட்சியாளர்களுடன் பேசவேண்டுமென்கிறார்களா, இனங்கள் அடையாளமின்றி அழிந்து போன வரலாறுகள் உண்டு. இதை இன அழிப்பு என்று சொல்லுகிறோம்

(தொடரும்...)

## காவலன் கலசம்

# ஏற்புடையோராய் எழுச்சி பெறுவோம்!

அருட்பணி வின்சன் பற்றிக் (அமதி)

எம்மை நாமாக ஏற்றுக்கொள்ளலே எழுச்சி பெறுவதற்கான முன்னடையாளமாகும். எமது இயற்றிறன்களை இனம்கண்டு, அவற்றை அடையாளப்படுத்தி வளர முற்படும் பொழுது, நாம் ஆற்றல்பெற்று எழுச்சி அடைகின்றோம்.

நினைத்தது எல்லாம் நடக்கவில்லை. எமது வாழ்க்கையில் எதிர்பார்த்தது எல்லாம் நிறைவாக்கப்படவில்லை. நடக்காத சம்பவத்தைக் கட்டாயம் நடக்கும் என எண்ணி, ஒருபக்கச் சார்பாக நடந்துகொள்வதைத் தவிர்த்துக் கொள்வோம். எம்முள் இருக்கும் ஆக்க சக்திகளை, அன்றாடம் ஆற்றி வரும் நிறைவான சம்பவங்களை நினைவுகூருவோம்.

**ஆற்றல் திறன்களை அதிகரிப்போம்**
**எமது ஆற்றல் திறனை அதிகரிக்க**

- ❖ ஒரு நேரத்தில் ஒரு வேலை என்ற கணக்கில் முயற்சி எடுப்போம்.
- ❖ எது அவசியமானதோ அதனை முதலில் ஆற்றுவோம்.
- ❖ எமக்குள் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக் கொணர்வோம்.
- ❖ எமதும் பிறரதும் வளர்ச்சியில் மகிழ்வடைவோம்.
- ❖ இலக்கமைத்து, திட்டமிட்டு, பாராட்டி, பரிசு வழங்கி, வள்ளல் தன்மையை அதிகரிப்போம்.
- ❖ என்றும் பிறருக்காக வாழ்வோரை மையப்படுத்திய வாழ்க்கை முறையை அவதானத்தோடு முன்னெடுப்போம்.
- ❖ எல்லோரையும் நல்லோராக்கும் முயற்சியில் ஆர்வத்தோடு ஈடுபடுவோம்.
- ❖ எமக்கு ஈடாகப் பிறரும் நல்லோராய் வாழ்கின்றனர் என்பதை மனதில் பதிப்போம்.
- ❖ மனவிருப்போடு, காரியங்களை முன்னெடுப்போம்.
- ❖ என்னைப் பற்றிய, எனது குடும்பத்தைப் பற்றிய குறுகிய வட்டத்துக்குள் சதா சஞ்சரிப்பதைக் குறைத்துக் கொள்வோம்.

எமது வாழ்வில் பெறும் வெற்றி நாம் எதிர்கொள்ளும் ஆட்களிலிருந்தும் உற்சாகமான பேச்சுக்களிலிருந்தும் சாதகமாகக் கிடைக்கின்றது. நாம் குன்றா மகிழச்சியுடனும் குதூகலிப்புடனும் காணப்படுகின்றோம் எனில் சாதகமான தொடர் உந்துசக்தி கிடைத்துக் கொண்டே இருக்கின்றது என்பதாகும்.

ஒவ்வொரு காரியமும் காரணம் இல்லாமல் நிகழ்வதில்லை. நாம் மகிழ்வுடன் காணப்படுகின்றோம் எனின் நேரிய வாழ்க்கை விழுமியங்களை, திறந்த மனப் பான்மையினை, நல்ல எண்ணக் கருக்களை எமது சிந்தனைக்கு விருந்தாக்கி வருகின்றோம்.

அத்தோடு எம்மோடு கூடிவாழும் உறவினர், நண்பர்களின் உற்சாக மூட்டலை, பாராட்டுக்களைப் பெறுகின்றோம். ஆலம் விழுதுகள்போல் ஆளை ஆள் தாங்கி, உற்சாகப்படுத்தி, ஊக்கத்தோடு ஆக்கத்தை மேற்கொள்வோம்.

உள்ளத்தின் ஆழத்தில் புதைந்துகிடக்கும் விதிகளைப் புரிந்துகொள்ள முடியாதவனாய் மனிதன் காணப்படுகின்றான். பூகோளத்தில் வியாபித்துக் கிடக்கும் சக்தி பூகம்பங்களாக, இடி முழக்கங்களாக பல வடிவங்களில் தோன்றுவதைப் போல மனிதனின் மனத்தில் வியாபித்துக் கிடக்கும் சக்தி ஒருங்கிணைந்து பல விளைவுகளை ஏற்படுத்துகின்றது.



உதாரணமாக, ஒருவர் பலமுள்ளவராகப் பல பணிகளை அதிசயிக்கத்தக்க முறையில் ஆற்றுவார். யானையைக் கட்டும் சங்கிலியைக் கைகளால் உடைப்பார். புவியீர்ப்பை எதிர்த்து அந்தரத்தில் உலாவுவார்.

உளசக்தி எல்லோரிடத்தில் இருப்பினும் அது விசேட முறையில் வெளிப்படுவது ஒரு சிலரிடம் மட்டுமே. சிலருக்கு இச்சக்திகள் இயற்கை கொடைகள் அல்லது வரங்கள் எனலாம். இன்னும் சிலருக்குக் நெறிப்படுத்தப்பட்ட வாழ்வில் சாதித்த சாதனைகள் ஆகலாம்.

**எமது நாளாந்த வாழ்வில் பிடிப்பை ஏற்படுத்துவோம்**

ஏனோதானோ நிலையில் வாழாது, எமது வளர்ச்சியினில் விருப்பத்தைத் தோற்றுவிப்போம். எமக்குள் இருக்கும் ஆற்றல்களை இனம்கண்டு, எம்மை நாமாக ஏற்றுக் கொண்டு, எமக்குள் இருக்கும் பிளவுபட்ட மனப்பான்மையை முறியடிப்போம். எமக்குள் விதை-நிலையில் இருக்கும் நற்பண்புகளைப் பதிவு செய்து, அவை உருவெடுப்பதற்கான சூழலை உருவாக்கி, எமது மனங்களை வளப்படுத்துவோம். எமது இருப்புநிலையை இனிதாக்குவோம்.

இதயபூர்வமான வேட்கையுடன் ஏனைய இதயங்களில் இடம்பிடிக்க நாம் விரும்புவதை மறுதலிக்காது, எமது இயல்பான உள்ளக்கிடக்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வோம். உணர்வுரீதியாக ஊட்டம் பெற்றவர்களாய், அன்றாடம் உவப்புடன் செயற்படுவோம். இரக்கம், இனிதான உறவுப் பரிமாற்றம், பரிவு, பணிவு, பகிர்தல், பிறருக்கு உதவும் மனநிலை, கருணை,கனிவு, கரிசனை, கூட்டு விழிப்புணர்வு, ஒருநிலைப்படுத்தல், ஒத்துணர்வு, நேர் சிந்தனை, நல்லதே செய்யவேண்டும் என்ற திடமான மனோபாங்கு, நம்பிக்கை போன்ற நற்பண்புகளை ஆழப்படுத்தி அர்த்தம் காண முற்படுவோம். எம்மை நாம் வளப்படுத்திக் கொள்ளக் கவனம் எடுப்போம். பேசும்பொழுதும் செவிமடுக்கும் பொழுதும் கண்ணும் கண்ணும் உற்றுநோக்கிட. ஒருவரை ஒருவர் அலட்சியப்படுத்தாது, அவதானத்தோடு செயற்படுவோம்.

கூனிக்குறுகி இருக்காது, நிமிர்ந்த நிலையில் துணிச்சலோடு உடையாடலை மேற்கொள்வோம். புன்னகையோடு, வரவேற்புநிலையில் வீட்டில் இருக்கக் கற்றுக் கொள்வோம். அனைத்திற்கும் பிறரில் தங்கியிராது, சார்ந்து சார்ந்து சோர்ந்து போகாது, நல்லிணக்கச் செயற்பாடுகளில் சேர்ந்து பயணிக்க முயற்சி எடுப்போம்.

“பிரபஞ்சம் வேகத்தையே விரும்புகின்றது. பிற்போடவேண்டாம். சந்தேகிக்க வேண்டாம். சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது, உத்வேகம் இருக்கும்பொழுது செயற்படுங்கள். அதுதான் உங்களது வேலை. அதுவே நீங்கள் செய்ய வேண்டியது” என்கின்றார் டாக்டர் ஜோ. விற்றாலி.

எமது உள்ளுணர்வுகளை நம்புவோம். பிரபஞ்சம் எம்மை உணர்வூட்டுகின்றது. உள்ளுணர்வு உந்தலால் ஊக்கப்படுத்தப்பட்டு, இசைவாக்கம் பெற்று நல்லவை பெற்று வாழ்ந்திட முன் வருவோம்.
சிந்தித்து, செயலூக்கம் பெற்று,
அன்றாடம் அர்த்தத்தோடு வாழ்ந்திட
ஆவன செய்வோம்

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

**ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்**
*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**மதர் சலோம் -**
Madeleine REYNAERT

தியாகம், 18 வருட நிர்வாகத் திறமையில் யாவரினதும் பாராட்டையும் பெருமையையும் மதர் சலோமையிடம் வெளிப்படையாகத் துலங்கியதை, அனுபவித்தவர்களே சான்று பகர்வார்கள். 200 ஆண்டுகள் கடந்தாலும், எதிர்கால சமுதாயம் மதர் சலோமையை நன்றியுடன் நினைவு கூர்கின்றது.

இளவாலையில் இருந்து, 1953ம் ஆண்டு தை மாதம் அனுராதபுரிக்கு மாற்றலாகிச் சென்று, இப்பணிகளை அங்கும் ஆற்றி 1958 தை மாதத் தொடக்கத்தில் இலங்கையை விட்டு நீங்கி லெசோத்தே சென்றார். இங்கு ஓர் உயர் பாடசாலையில் Typing படிப்பித்து பெற்றோர் மாணவரின் பாராட்டைப் பெற்றார். 73 வயதில் 9 வருடங்கள் லெசோத் தோவில் செலவிட்ட பின்பு Natal நத்தால் என்னும் இடத்தில் உள்ள இந்திய மக்கள் குழுவைப் பொறுப்பேற்று, அவர்களை நன்கு புரிந்து நம்பிக்கையுடன் சேவை செய்தார்.

5 வருடங்களின் பின்பு, ஆபிரிக்காவில் உள்ள நத்தாலை விட்டு விட்டு, பெல்ஜியத்துக்கு வந்து, Vieusart என்னும் இடத்தில் வயோதிப சகோதரிகளுடன் சிறிய வேலைகளையும் செய்து உறவுடனும் செபத்துடனும் வாழ்ந்தார். மதர் சலோமை, முதலில் மிஷனறி நாடுகளில் பணிபுரிந்தாலும், கடைசியாக வாழ்ந்த குழுவில் தனது பக்தி, சக்தி வியாதியில் பொறுமையுடனும், துணிவுடனும் முன் மாதிரிகையாக இருந்து குழுவைக்கட்டி எழுப்பினார். இறைவனை சந்திக்க வேண்டும் என்னும் ஆர்வத்துடன் வாழ்ந்த இவர் 92 வயதில் 1986ம் ஆண்டு பங்குனி 29 இல் இறைவன் திருவடி சேர்ந்தார். நல்ல தேவன் தம் அடியாளுக்கு இன்ப சாந்தி அருள்வாராக.

### St. Maria de la Conception

பிரான்சில் உள்ள புனித கோவே என்னும் இடத்தில் பசில் ஒறியா, மாறி பான் என்னும் தம்பதியினருக்கு மூத்த மகளாக 1901ம் ஆண்டு, பங்குனி 21ம் திகதி மாறி பிறந்தார். பசில், ஆஞ், விக்ரர் என்னும் 3 ஆண் பிள்ளைகளையும் மாறி, ஆஞ்சல், பேணடேற் என்னும் 3 பெண் பிள்ளைகளையும் கொண்ட விவசாயக் குடும்பமாக பிவாடியர் என்னும் இடத்தில் வசித்தனர். தினமும் திருச்செபமாலை ஓதி மாதம் ஒருமுறை அருட்சாதனங்களைப் பெற்று பக்தி உள்ள நல்ல கத்தோலிக்க குடும்பமாகத் திகழ்ந்தார்கள். சிறு வயதிலிருந்தே நல்ல கிறிஸ்தவ பெற்றோரால் உருவாக்கப்பட்ட மாறி 6 வயதில் புனித கோவேயில் உள்ள பாட-சாலையில் படித்து 9 வயதில் முதன்நன்மை பெற்றார். ஒரு நல்ல குருவானவர் இவரை ஆயத்தப்படுத்தினார். ஓய்வான நேரங்களிலும் பாடசாலை செல்லும் போதும், தன் சகோதரர்களைப் பராமரிக்கும் போதும், செபமாலை ஓதுவார். தேவதாயின் அருளினால் இறை அழைத்தலைப் பெற்றுக் கொண்டது. பெற்றோருக்கு மிக மகிழ்ச்சியை அளித்தது. புனித கோவே என்னும் இடத்தில் 5 வருடத்திற்கொரு முறை ஆயரின் சந்திப்பு இடம்பெறும். 1915ம் ஆண்டு சித்திரை 27ம் திகதி தன் சகோதரன் பசில், தங்கை ஆஞ்சல் இருவருடன், மாறியும் உறுதிப்பூசுதல் பெற்றுக்கொண்டார். அத்துடன் பாடசாலை செல்வதையும் நிறுத்திக்கொண்டார். உலகப் போர் மூண்ட காலத்தில் விவசாய வேலைகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. மாறி வீட்டில் இருந்து தம் சொந்த வேலை

**அருட்சகோதரி அம்புரோஸின் மார்க்**

களையும் செய்து, அயல் வீட்டில் இருப்பவர்களுக்கும் உதவி செய்தார். இக்கஸ்ரமான நேரத்தில் வீட்டை விட்டுப் புறப்படுவது சரியல்ல என்று நினைத்து, ஆசிரியப் பணிக்கு தன்னைத் தயார் செய்தார்.

1916ம் ஆண்டு கார்த்திகை மூன்றாம் திகதி ஒரு சிறிய ஒழுங்கு எழுதித் தன் படிப்பை மேற்கொண்டார். ஆலயப் பணி பீட அலங்காரம் போன்ற வேறு வேலைகளுக்கும் தன்னைக் கையளித்தார். பெரிய லீவு காலங்களில் 12 நாட்கள் தனது வீடு சென்று, பெரிய வேலைகளுக்கு உதவி செய்வார். பின் நகருக்கு வருவார். 2 வருடங்கள் கழிந்தும் படிப்பு திருப்தி தரவில்லை. எனவே, பரிசில் உள்ள மிலானில் திருக்குடும்ப இல்லத்தில் 1919ம் ஆண்டு 3ம் திகதி வந்து சேர்ந்து படித்தார். எனினும், ஆடி மாதத்தில் நடைபெற்ற பயிற்சியில் சித்தியடையவில்லை. தலைநகர் பரிசில் மரியாயின் பிள்ளைகள் சபையில் செலவழித்த காலம் மாறிக்குப் பாதை திறந்தது. பிரித்தானியாவுக்குச் சென்ற போது 6 கிழமைகள் பெற்றோருடன் செலவழித்தார். இதுவே பெற்றோருடன் கடைசியாகச் செலவிட்டகாலம்.

ஆடி மாதக்கடைசியில் டெனிஸ் தாயார் கோவேக்கு வந்த போது, மாறி டிலா கொன்செப்சனை போர்டோவுக்கு அழைத்துச் செல்ல விரும்புவதைத் தெரிவித்தார். மாறி இதைக் கேட்டு முதலில் ஆச்சரியப்பட்டாலும், பின் மகிழ்வுடன் தன் குடும்பத்திடம்பிரியாவிடைபெற்றுக்கொண்டார். முதலில் போர்டோவில் உள்ள றுகஸ் ரோன் என்னும் இடத்தில் சில கிழமைகள் செலவழித்தார். ஆயத்தக் கன்னிகையாக வரமுன், லூர்து கெபிக்கு யாத்திரை செய்தார். 1919ம் ஆண்டு புரட்டாதி 5ம் திகதி சென்பியர் தலன்ஸ் சென்று, நல்ல உள்ளத்துடன் எல்லா வகையான வேலையிலும் ஆர்வத்துடன் செயற்பட்டார்.

மாறி மாசில்லா உற்பவக்கிளையில் 1920ம் ஆண்டு பங்குனி 25ம் திகதி துறவற உடுப்புப்பெற்று, மாறி டிலா கொன் செப்சன் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டார். சாந்தமான திடமான, கவர்ச்சியான முகவடிவையும் உயரமான தோற்றத்தையும் கொண்டிருந்தார். *(தொடரும்..)*

# யாழ்ப்பாணக் கத்தோலிக்க கூத்து மரபு ஒரு தலைசிறந்த கூத்தாளியை இழந்தது



## அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜாவின் இழப்பினூடு ஒரு பார்வை

யாழ்ப்பாணத் தென்மோடிக் கூத்துமரபின் முதுசமாகத் திகழ்ந்த அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா அவர்கள் 20.05.2021 அன்று மரணமானார் என்ற செய்தி ஈழத்தின் நாடக உலகத்திற்கு ஒரு அதிர்ச்சியான செய்தியாகும். நீண்டகால அனுபவங்களுடன், பூந்தான் யோசேப்பு, பக்கிரி சின்னத்துரை உள்ளிட்ட மூத்த அண்ணாவிமார்களோடும், பல இளைய அண்ணாவிமார்களோடும் இணைந்து பணியாற்றி தென்மோடிக் (கத்தோலிக்க) கூத்துமரபின் வகைமைக்குச் சான்று பகரக்கூடிய ஒரு சில அண்ணாவிமார்களில் முதன்மையானவராகத் திகழ்ந்தார் திருமறைக் கலாமன்றத்தில் ஒரு கூத்துப் பாரம்பரியம் உருவாகவும் வளரவும் காரணமாக இருந்த இவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது. தன்னுடைய அனுபவங்களை மற்றவருக்குக் கொடுக்கவேண்டும் என்ற பேரவாவுடன் செயற்பட்டதுடன் இளையவர்கள் பலரைக் கூத்துமரபில் உள்ளீர்த்து மரபின் நீட்சிக்கு வழிகோலியதுடன், நாடு கடந்து புலம்பெயர்ந்த தேசங்களில் இருந்தவர்களுக்கும் பலவகையில் ஊக்கமாக செயற்பட்டார், கூத்தினை ஆவணமாக்கும் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்ட இவரது இழப்புடன் எமது கூத்துமரபு 'ஒரு மரபின் முதுசத்தை இழந்து நிற்கின்றது' என்பது வேதனைக்குரிய விடமாகும்.

யாழ்ப்பாணம் பறங்கித்தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட அருளப்பு பேக்மன் ஜெயராஜாவாகிய இவர் 21.10.1945 அன்று பிறந்தார். இலங்கை தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர். வளன்புரம் கொழும்புத்துறையைத் தனது வாழ்விடமாகக்கொண்டவர். தனது 21 ஆவது வயதில் இருந்தே பகுதிநேரமாகக் கூத்துத்துறையில் ஈடுபடத் தொடங்கியவர் ஆரம்பத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த அண்ணாவியார் வின்சன் டிபோல் அவர்களுடைய கூத்துக்களிலேயே ஆரம்ப காலங்களில் நடித்தார். அவரது நடிப்புத் திறனையும் குரல் வளத்தினையும் கண்ட அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய அண்ணாவியார் பூந்தான் யோசேப்பு இவரைத் தனது சங்கிலியன் நாட்டுக்கூத்தில் நடிப்பதற்கு அழைத்தார். அதில் நடித்த அனுபவம் இவருக்கு பூந்தான் யோசேப்புவின்பால் மதிப்பைக் கொண்டுவர அவரது 'யாழ் நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றத்தில்' இணைந்தார். பூந்தான் யோசேப்பு இறக்கும் வரை அவருடைய கூத்துக்களில் நடித்தது மட்டுமன்றி அவர் மேற்கொண்ட கூத்து நெறியாக்கங்களிலும், நிர்வாகப் பணிகளிலும் பக்கபலமாக இருந்தார்.

அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த அண்ணாவிமார்களான பக்கிரி சின்னத்துரை, சாமிநாதர், குணசிங்கம், பாவுலுப்பிள்ளை, இராசாத்தம்பி, அந்தோனிப்பிள்ளை, சுவாம்பிள்ளை, வின்சன் டிபோல், பெலிக்கான், பொன்னுத்துரை, செல்லையா, அருளப்பு, மனப்பு போன்ற கூத்தின் ஜாம்பவான்களாக கருதப்பட்ட பல அண்ணாவிமார்களையும் ஒன்றிணைத்து பூந்தான் யோசேப்பு அவர்கள் பல கூத்துக்களைத் தயாரித்தார். இந்த மூத்த அண்ணாவிமார்களை ஒன்றிணைக்கும் பணிக்கு பூந்தான் யோசேப்பு அவர்களுக்கு உதவியதுடன் அவர்களுடன் நடித்த அனுபவங்களையும் தனதாக்கிக் கொண்டதனால் ஈழத்தின் தென்மோடிக் கூத்துமரபின் நெளிவு சுழிவுகளையும் அதன் ஆழ நிலைப்பட்ட நெறிகளையும் வகைத் தூய்மையையும் அறிந்தவராகத் திகழ்ந்தார்.

பிற்பட்ட காலத்தில் நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றினார். அக்காலத்தில் சில்லாலை, இளவாலை, விளான், பலாலி, நாரந்தனை, கட்டைக்காடு, குடாரப்பு, செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி, ஒட்டகப்புலம், அச்சுவேலி எனப் பல கிராமங்களுக்கும் சென்று கூத்துக்களை பூந்தான் யோசேப்புவுடன் பயிற்றுவித்தது மட்டுமன்றி அவ்வப்பிரதேசக் கலைஞர்களுடன் நீண்டகாலமாகத் தொடர்புகளையும் பேணிவந்தார். அது மட்டுமன்றி இலங்கை வானொலியில் அக்காலத்தில் கூத்துக்கள் ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பிய காலத்தில் பல கூத்துக்களில் நடித்தது மட்டுமன்றி அவற்றின் ஒலிப்பதிவுக்கும், வீ.ஏ. சிவஞானம்,கே. எம். வாசகர், அ.தாசீசியஸ் போன்றவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கினார்.இனிமையான குரல் வளமும் உச்ச சுருதியில் பாடுந்திறனுங் கொண்ட இவர் 'நாடகக்காரன்' பாத்திரங்களையே அதிகமாக நடித்தார். தென்மோடிக் கூத்துமரபில் பிரதான பாத்திரங்களை 'இராச பாத்திரம்' (ராஜபாட்), 'பெண்பாத்திரம்' (ஸ்திரி பாட்), 'நாடகக்காரன் பாத்திரம்' என வரையறுப்பர். நாடகக்காரன் பாத்திரம் புனிதர்கள் வேதசாட்சிகளின் பாத்திரங்களாக இருக்கும் அவற்றை ஏற்பவரின் சாரீர வளம் உச்ச சுருதியில் பாடுந்தன்மையில் அமைய வேண்டுமென்பதுடன் மிகவும் சிக்கலான சோக இராகங்களைப் பாடவல்லவராக இருக்கவேண்டுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. அத்தகைய நாடகக்காரன் பாத்திரங்களையே அதிகம் ஏற்ற இவர் 'சங்கிலியன், கருங்குயில் குன்றத்துக் கொலை, மரியதாசன், எஸ்தாக்கியார், தேவசகாயம் பிள்ளை, விஜயமனோகரன், 'மனம் போல் மாங்கல்யம்' போன்ற பல கூத்துக்களில் பூந்தான் யோசேப்பு அவர்களுடனும் பல மூத்த அண்ணாவிமார்களுடனும் நடித்துப் புகழ்பெற்றார். பூந்தான் யோசேப்பின் இறப்பின் பின்னர் திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்பணி நீ. மரியசேவியர் அடிகளின் அழைப்பினை ஏற்று திருமறைக் கலாமன்றத்தில் இணைந்த இவர், 'நாட்டுக் கூத்துப்பிரிவில் அண்ணாவியார் அ. பாலதாசுடன் இணைந்து கூத்துக்களை நெறிப்படுத்தியதுடன் பல கூத்துக்களில் பிரதான பாத்திரம் ஏற்றும் நடித்தார். நீ ஒரு பாறை, அனைத்தும் அவரே, இரத்தக்கடன், இடமில்லை, கம்பன் மகன், தேவசகாயம்பிள்ளை, செந்தூது, சோழன் மகன்.. போன்ற பல கூத்துக்களில் நடித்தது மட்டுமன்றி நெறியாள்கையும் செய்தார்.

கூத்துக்கள் புதிதாக எழுதப்படவேண்டும் என்ற ஆர்வங்கொண்டிருந்த இவர் இளையோரைக்கொண்டு புதிய கூத்துக்களை எழுதுவிப்பதற்கு ஊக்கமாக இருந்து ம. சாம் பிரதீபனைக் கொண்டு 'சோழன் மகன்' கூத்தையும் யோண்சன் ராஜ்குமாரைக் கொண்டு 'கம்பன் மகன்' கூத்தினையும், அழகராசாவைக் கொண்டு 'வளையாபதி' கூத்தினையும் எழுதி மேடையேற்றியது மட்டுமன்றி அவற்றினை நூலாகவும் பதிப்புச் செய்வித்தார். அதுமட்டுமன்றி சில்லாலை, அச்சுவேலி, வெற்றிலைக்கேணி, இளவாலை.. எனப் பல கிராமங்களுக்கும் சென்று கூத்துக்களை நெறிப்படுத்தியது மட்டுமன்றி பல பாடசாலைகளிலும் மாணவர்களுக்குக் கூத்துக்களைப் பயிற்றுவித்து மேடை யேற்றினார்.



**காவலூர் யோவான்**

திருமறைக் கலாமன்றத்தில் இளையோரை இலக்கு வைத்துக் கூத்துக்களைப் பயிற்றுவித்ததுடன் பல இளைஞர்கள் இன்று கூத்துக்களை நிகழ்த்துவதற்குக் காரணமாகத் திகழ்ந்தார். திருமறைக் கலாமன்றம் நிகழ்த்திய நாட்டுக்கூத்து விழாக்கள், நாட்டுக்கூத்துப் போட்டிகள், கருத்தரங்குகள், பட்டறைகள் எனப் பலதரப்பட்ட செயற்பாடுகளுக்கும் ஒரு குருஷேஸ்திரமாக நின்று வழிகாட்டினார்.

அது மட்டுமன்றி யாழ்ப்பாணக் கத்தோலிக்க கூத்துமரபின் அடிநாதமாக இருக்கின்ற இசைமரபினைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கோடு ஐந்து வருடங்கள் முயற்சி செய்து 158 பாடல் மெட்டுக்களையும் ஒலிப்பதிவு செய்து, அதன் இராக தாளங்களை இற்றைப்படுத்தி யாழ்ப்பாணத் 'தென்மோடிக் கூத்துமரபின் இசை மெட்டுக்கள்' என்ற இசை இறுவட்டின் மூலமும் அதற்கான நூல் தொகுப்பின் மூலமாகவும் மிகப்பெரிய ஆவணமாக்கினார். அதுபோலவே கிறிஸ்தவ மரபு-வழி ஒப்பாரிப் பாடல்களை 'வியாகுல இசைத்தருக்கள்' என்ற பெயரில் திருமறைக் கலாமன்றத்திற்கூடாக ஒலிப் பதிவு செய்து வெளியீடு செய்தார். பல கூத்து நூல்களைத் திருமறைக் கலாமன்றம் பதிப்புச் செய்வதற்கும் இவரது ஊக்கமே காரணமாக இருந்தது. 1997, 1998 காலப்பகுதியில் திருமறைக் கலாமன்றம் வடலிக்கூத்தர் கலைப்பயணம் என்ற பெயரில் மேற்கொண்ட ஐரோப்பிய கலைப் பயணத்தில் இணைந்து சென்று பிரான்ஸ் லண்டன், யேர்மனி, சுவிற்சிலாந்து, ஹொலன்ட் போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் மரபு வழி நாடகங்களை நிகழ்த்திப் புகழீட்டி மீண்டார்.

மேதகு.வ. ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் இருந்த காலத்தில் அவருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்த இவர் ஆயரின் விருப்புக் கிணங்க பல கூத்துசார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டார். இவரது கலைப் பணிக்காக முன்னாள் மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் இவருக்கு 'இசைக்குயில்' என்ற விரு-தினை வழங்கினார். திருமறைக் கலாமன்றம் இவருக்கு 'கலைஞான பூரணன்' என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது. இலங்கை கலாசார அமைச்சு 'கலாபூசண'விருதையும் வடமாகாண பண்பாட்டுத் திணைக்களம் ஆளுநர் விருதினையும், யாழ்பிரதேசச் செயலகம் யாழ் ரத்னா விருதினையும் வழங்கி கௌரவப்படுத்தினார்கள். விருதுகளால் கௌரவம் பெற்றவர்கள் மத்தியில் இவரால் விருதுகள் கௌரவம் பெற்றன என்றே கூறலாம். கலையிலும் பண்பாட்டிலும் பற்றுக்கொண்ட அர்ப்பணிப்புடன் தம்மை சமூகத்திற்குக் கையளித்த பெரும் விருட்சங்களை ஈழமண், அதிலும் கத்தோலிக்க திருச்சபை இழந்து கொண்டிருப்பது வேதனைக்குரியது. அதுவும் இந்த இடர்க்கால ஊரடங்கில் அவர்களது இழப்புக்களும் பேசப்படாமல் போவது மிகுந்த வேதனையை அளிக்கின்றது.


கவனம்... அபாயம்... அவதானம்...

அனைவரும் ஒன்றிணைந்து பிரார்த்தனை செய்வோம்

தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மக்களின் நல்வாழ்வுக்காக மௌனமாக பிரார்த்திப்போம்

தொற்றுக்கிருமியைத் தடுத்து, எம்மையும், எல்லோரையும் பாதுகாக்க பொறுப்புடன் செயற்படுவோம்

நோயினால் மற்றும் தற்கால சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவருக்கு உதவிக்கரம் நீட்டுவோம்

அனைவரும் தடுப்பூசி பெற ஆவன செய்வோம்

Jaffna District Inter Religious Council | யாழ். மாவட்ட சர்வமத பேரவை

# காவலன் கலசம்

# மன்னியுங்கள் மன்னிக்கப்படுவீர்கள்

அருட்.சகோ.வி.ஜெ.யேசுதாஸ்

இது வரலாற்றிலே அரங்கேறிய ஓர் அழகிய உண்மைச் சம்பவம். பிரித்தானியாவினுடைய படைத்தளபதி ஜேர்மனிய போர்வீரன் ஒருவனின் அன்னைக்கு ஓர் மடல் அனுப்புகின்றான். “என் தாய்நாட்டின் ஓர் போர் வீரனாக யுத்தகளத்திலே உங்கள் மகனைக் கொல்லவேண்டியது என் கடமையாயிற்று. ஆனால் ஒரு கிறிஸ்தவனாக உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதும் எனது கடமை. யுத்த நிறைவிலே நான் உயிரோடிருந்தால் உங்களை நேரில் சந்தித்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என விரும்புகின்றேன்” என்று எழுதினான். சில வாரங்கள் கழித்து அந்தத் தாயிடம் இருந்து அவன் பதில் கடிதம் ஒன்றைப் பெற்றான். அதில் அந்தத் தாய் என்ன எழுதியிருக்க கூடும் என எண்ணுகிறீர்கள்? “எனது மகனைக் கொன்ற கொடும் பாவியே! அரக்கனே! இரக்கமில்லாதவனே! என் ஒரே மகனைக் கொன்று என்னை அனாதையாக்கியவனே, உனக்கு என்னிடத்தில் மன்னிப்பா? என்னிடத்தே மன்னிப்புக் கேட்க உனக்கு எத்தனை துணிவு? எவ்வளவு தைரியம்? நான் வழிபடும் கடவுள் உண்மையானவராக இருந்தால், அனைத்தையும் காண்பவராக இருந்தால், நீதியுள்ளவராக இருந்தால் எனது மகனைக் கொன்ற நீயும் அதே யுத்தத்திலேயே இறந்து மடிக!” இப்படியாகத் தான் அந்த தாய் பதில் அனுப்பியிருக்கக்கூடும் என எம்மில் பலர் எண்ணக்கூடும். ஆனால் அவளுடைய பதிலோ வேறு விதமாக அமைந்தது. “நீ எனது மகனைக் கொன்ற போதிலும் கூட எனது மனம் உன்னை மன்னிக்கும் படி சொல்கின்றது. ஏனெனில் நானும் ஒரு கிறிஸ்தவள். இந்த யுத்தத்தில் இருந்து நீ நல்லபடியாக உயிரோடு திரும்ப வேண்டும் என மன்றாடுகின்றேன். உனக்காக உபவாசம் இருக்கின்றேன். ஏனெனில் நீ இவ்யுத்தத்தின் பின் உயிரோடு ஜேர்மனி திரும்பி என் மனதிலும் என் வீட்டிலும் என் மகனின் இடத்தை நிரப்ப வேண்டும் என விரும்புகின்றேன். என் மகன் மீது நான் காட்டிய அதே பாசத்தை அவனைக் கொன்ற உன் மீதிலும் நான் காட்ட வேண்டும்” என்று பதில் அனுப்பினாள். அந்த அன்னையின் பதிலை வாசித்த படைவீரன் அந்த தாயில் இன்னொரு இயேசுவைக் கண்டு, அந்தத் தாயில் இன்னொரு அன்னை மரியைக் கண்டு உள்ளம் நொறுங்குண்டு போனான். ஆனால் கிறிஸ்துவும் கிறிஸ்தவமும் இன்னும் வாழப்படுவதைக் கண்டு உள்ளம் பூரித்தான்.

அன்பானவர்களே! தான் தன் ஆண்டவரை மறுதலித்து செய்த தவறை எண்ணி மனம் நொந்து, உள்ளம் குமுறி அழுத பேதுருவின் மறுரூபத்தை அந்தப் படைவீரனிலும், தன்னை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தவனையும், திட்டமின்றி தன்னை மறுதலித்தவனையும், கரங்களைக் கழுவி மரணத்திற்குத் தன்னைக் கையளித்தவனையும், தம் எச்சில்களால் தன் முகங்களை அலங்கரித்தவர்களையும், முள்முடியால் தனது சிரம்தனை அழகு பார்த்தவர்களையும், தாராள மனதுடன் கசையடிகளைத் தனக்கு பரிசளித்தவர்களையும், திட்டம் தீட்டி தன்னை நிர்வாணம் ஆக்கியோரையும், சிலுவையின் உச்சம் தனில் தனக்கு பட்டம் சூட்டியோரையும், தனை இகழ்ந்த கொடும் பாவி கள்வனையும் நினைத்து “தந்தையே இவர்களை மன்னியும். இவர்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குதெரியவில்லை.” என்று மன்றாடிய இயேசுவின் மறுரூபத்தை அந்த அன்னையிலும் காணலாம். நாம் நம் வாழ்வில் இயேசுவினுடைய வேடம் தரித்தலும் நலம். பேதுருவின் வேடம் தரித்தலும் நலம். ஆனால் பேதுருவைப் போல் மன்னிப்புக் கேட்பதற்கும் நாம் தயாராக இல்லை. நம் ஆண்டவர் இயேசுவைப் போல் மன்னிப்பதற்கும் தயாராக இல்லை.

நாம் கண்டு மகிழ்ந்த அழகிய கூட்டுக் குடும்பங்கள் மன்னிக்கும் மனமில்லா தன்மையால் சிதறுண்டு சிக்குநூறாகிப் போன அவலங்களை நாம் கண்டதில்லையா? மதில்களூடாக உருவாகிய வாய்த் தகராறுகள் சொந்தச் சகோதரங்களையே பிரித்து விட்ட சோகக் கதைகள் நம் காதுகளை எட்டவில்லையா? ஏன் இந்தப் பிரிவுகள்? ஏன் இந்த அவலங்கள்? ஏனெனில் மன்னிப்பதற்கும் நாம் தயாராக இல்லை. மன்னிப்புக் கேட்பதற்கும் நாம் தயாராக இல்லை. எமக்காக ஆண்டவர் தம் மாசுமறுவற்ற இரத்தத்தையே சிந்தினார். ஆனால் நாம் எமது இரத்த சொந்தங்களையே மன்னிப்பதற்கு தயாராக இல்லை.

நான் எனது அண்ணாவோடு இரண்டு வருடங்களாக கதைப்பதில்லை. நான் எனது தங்கச்சியோடு ஐந்து வருடங்களாக கதைப்பதில்லை. நான் எனது பக்கத்து வீட்டுக்காரரோடு பத்து வருடங்களாக கதைப்பதில்லை. என்று சொல்வதிலே ஒருவித பெருமை என எண்ணுகின்றோம். ஆனால் நாம் நம் ஆண்டவரை விட்டு தூர விலகிச்செல்லு கின்றோம் என்பதுதான் உண்மை. ஆண்டவருடைய ஆசீர்வாதங்களை எம்மிலே இருந்து கழுவிவிடுகின்றோம் என்பதுதான் உண்மை.

(தொடர்ச்சி 11ம் பக்கம்..)


## துறவற வாழ்வில் பொன்விழாக்காணும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரிகள்

50 ஆண்டுகள்



அருட்சகோதரி தெரேஸ் நொயலின்

அருட்சகோதரி மாறி புளோரன்ஸ்

அருட்சகோதரி மாறி யூடித்

எமது அருட்சகோதரிகளின் 50 வருட துறவற அர்ப்பண வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றிப் புகழ்பாடி அவர்களது அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி மகிழ்கின்றோம்.

அருட்சகோதரிகள்
கார்மேல் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்,
இலங்கா மாதா மடம், அச்சுவேலி.



## 3ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 08 . 05 . 1957



மறைவு 09 . 06 . 2021

அமரர்

### இவாஞ்சலின் எழில் வானம்பாடி சாள்ஸ்

(இளைப்பாறிய ஆசிரியை)

“ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது - (தி.பா 84:1)

அன்புத் தந்தையே இறைவா! நீர் உம்மிடம் அழைத்துக் கொண்ட உமது அன்பு மகள் இவாஞ்சலின் எழில் வானம்பாடி சாள்ஸ் என்பவரின் விசுவாசம் நிறைந்த வாழ்விற்காகவும், நீர் அளித்த கொடைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். இவரின் பாவங்களையும், குறைகளையும் மன்னித்து நிலைவாழ்வையும் புனிதர்களின் தோழமையுள்ள உறவையும் கொடுத்தருள உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்

இவரின் இழப்பால் துயருற்று இருந்தவேளை எம்மோடு உடனிருந்து ஆறுதல் கூறிய கியூடெக் – கரித்தாஸ் நிறுவன இயக்குனர் தந்தை, பணியாளர்கள், புனித மரியன்னை பேராலய, புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தையர்கள், புனித மடுத்தீனார் குருமட அதிபர் மற்றும் உதவி அதிபர், ஆசிரிய சமூகம், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், வீடமைப்பு அதிகாரசபை மாவட்ட முகாமையாளர், பணியாளர்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக ஆறுதல் கூறியவர்கள், மலர் வளையம் வைத்தவர்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் உறவுகள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் குடும்பத்தின் சார்பில் நன்றி கூறுகின்றோம்.

96, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

AD/ 50

அன்புடன்
குடும்பத்தினர்



## விண்ணக வாழ்வின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 . 03 . 1935



விண்ணில் 04 . 06 . 2018

அமரர்

### வென்கூக்கோன் பொன்ராசா அன்ரன் கிளாறன்ஸ் ஆனந்தராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியர் ஹென்றியரசர் கல்லூரி - இளவாலை)

ஆண்டு மூன்று ஓடி மறைந்தாலும்
எம் நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபங்கள்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது
கண்ணில் இமைபோல எம்மைக் காத்த அப்பாவே!
உங்கள் நினைவுகளுடன் என்றும் வாழ்கின்றோம்
நிகழ்வுகள் அனைத்தும் நினைவுகளாகி நிரந்தரமாயிற்று
சிரித்த முகம் எம்மை விட்டுப் பிரிந்து
உம் பாசம் ஒன்றே எம்மை விட்டுப் பிரியாது
எம் வாழ்நாளெல்லாம் புன் சிரிப்பாலும்
கள்ளமில்லா உள்ளத்தாலும் எம்மை அன்போடு நேசித்த
உங்களை எம் இதயங்களில் சுமக்கின்றோம்.
உங்கள் ஆன்மா வான்வீட்டில் உறைந்திட
படைகளின் ஆண்டவரை மன்றாடுகின்றோம்.

AD /47

“மனோ சாந்தி”,
407 கொறவப்பொத்தானை வீதி,
இறம்பைக்குளம்,
வவுனியா – 024 222 1984

மாறா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
08.09.1938

இறப்பு
14.07.2020

### அருட்பணி R.M.G.நேசநாயகம்

"சீவியத்தில் நேசித்தவர்களை மரணத்தில் மறவாதீர்கள்"

எம் வாழ்வின்
வேராக இருந்தவரே
நேசத் தந்தையே!
வாழ வைத்த தெய்வமே!

உமக்கு ஒருபோதும்
மரணம் இல்லை
எம் இதயங்களில்
என்றும் இருக்கின்றீர்
இறைவனில் இளைப்பாறும்

AD/54 உயரப்புலம், ஆனைக்கோட்டை கோவிலம்மா குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 02 . 1959



இறப்பு 18 . 06 . 2021

### டாக்டர் இம்மேக் ஜூவன்டினஸ் தம்போ

**இம்மேக் ஜூவன்டினஸ் தம்போ** Ph.D.I.D. பலரால் கேசி என்றழைக்கப்படும் இவர் 18.06.2021 நிவ்ஜேர்ஸியில் காலமானார்.

இவர் வெர்ஜீனியாவின் அன்புக் கணவரும், மைக்கேல் மற்றும் எமிலி ஆகியோரது தகப்பனும், அன்னா லூர்துமலர், ஜோசப் போன்ஜியன் தம்போ அவர்களது புதல்வனும், யாழ்ப்பாண மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் மருமகனும், விஜிதா(டட்லி தம்பிநாயகம்), பஸ்டி (கரண் தம்போ), இந்திரா (காலஞ்சென்ற பிலிப் சௌந்தரராஜ்) மற்றும் லலன்தி (பீட்டர் ரட்னவேல் ஆகி யோரது சகோதரனும், காலஞ்சென்ற ஜோன் அல்பிரட் சிக்கராயர் மற்றும் ரோஸ் அல்பிரட் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற என்டனி (ஜீவா), சில்வெஸ் டர்(ஷர்மிளா), பெலிஷியன் (சுஜீவா), எனா (கண்ணன் மற்றும் பல மருமகள், மருமகன்களின் மாமனாரு மாவார். *(அன்னாரின் நல்லடக்க ஆராதனை 28.06.2021 அன்று அமெரிக்காவில் நடைபெற்றது)*

தகவல் : டட்லி தம்பிநாயகம்

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 . 09 . 1934



இறப்பு 12 . 06 . 2019

### அமரர் மைக்கல் பேரின்பநாயகம்

எம்மை அழவிட்டு நீங்கள் சென்று
ஆண்டு இரண்டு ஆனதுவோ!
நீண்டு செல்லும் நாட்களிலே
நிழல் வடிவில் தெரிகின்றீர்கள்
ஆண்டு பல சென்றாலும் அகலாது...
எமக்குள்ளே தெய்வமாக வாழ்கின்றீர்கள்!
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எங்கள் குலவிளக்கே!
அனுதினமும் தெரிகின்ற
எம் குடும்பத் தெய்வமானவரே
மாண்டவர்களோடு நீங்கள்
விண்ணுலகில் வாழ்ந்தாலும்
மனதாலும் நினைவாலும்
தினம்! தினம்! துடிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

பிரிவில் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மோசஸ் அன்ரனிப்பிள்ளை**
(குமார்)
(ஓய்வுநிலை பொலிஸ் CID இன்ஸ்பெக்ரர்)

பிறப்பு :- 04.09.1937
இறப்பு :- 23.07.2019

மனங்களில் நிதம் வாழும்
மகத்தான மாமனிதன்
எங்கள் ஆசை அங்கிள்
எங்கு சென்றீர் என்று
எப்படி நாம் கேட்போம்?
உயிருள்ள எம்முடன் உயிர் மூச்சாகி
உயிர்ப்பற்ற எம் உடைமைகளில்
உண்மையின் உருவமாகி
உறைகின்ற அன்புருவே!
இறை அருளில் இன்புற
இறைவனை இறைஞ்சி
கூப்புகின்றோம் கரங்களை அல்ல
எம் உள்ளங்களை...

'செல்லம்ஸ்' உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

பிரிவின் துயரில்
சகோதரி, பெறா மகள்,
மருமக்கள், அன்புறவுகள்.

## 11ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 21 . 10 . 1935



உதிர்வு 16 . 07 . 2010

அமரர்

### பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம்

மாண்டவர் மீண்டதில்லை
என்ற போதும் - மாற்றமுடியவில்லை
உமக்கான எம் தேடலை- இப்
பதினொரு வருடங்கள் நிறைவிலும்

AD / 51

7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

தாய் மடியில் 16 . 12 . 1924



இறை அடியில் 10 . 06 . 2020

அமரர்

### திரு.இறமேந்து தேவசகாயம்

(ஓய்வுநிலை அதிபர்)

'ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம்
நான் குடியிருக்க வேண்டும்' (தி.பா.27:4)

அன்பான இறைவா!

இவ் உலகிலிருந்து உம்மிடம் அழைத்துக் கொண்ட உமது அடியான் அமரர் இறமேந்து தேவசகாயம் அவர்களை உமது நித்திய வான்வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம். ஆமென்

AD 45

3ம் வட்டாரம்,
மண்டைதீவு.

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## மன்னியுங்கள்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டவருடைய பாதுகாப்பு அரணை எம் குடும்பங்களில் இருந்து அப்புறப்படுத்துகின்றோம் என்பது தான் உண்மை.

மன்னிப்புக் கேட்பவன் ஒரு நாளும் தரங்குறைந்து போவதும் கிடையாது. மன்னிப்பவன் ஒருபோதும் மதிப்பிழந்து கெட்டுப் போவதும் கிடையாது. ஆண்டவர் தன்னுடைய மரணவேளையின் இறுதி நிமிடங்களிலே, தான் இவ்வாறு இறக்கக் காரணமான இந்த உலகை மன்னிக்காது போயிருந்தால் அல்லது தன் தந்தையை நோக்கி "தந்தையே உன்னுடைய மகன் நான் மரணிக்கக் காரணமான இந்த உலகை அழித்தொழிப்பீராக!" என்று மன்றாடியிருந்தால் இன்று இந்த உலகிலே கிறிஸ்தவம் இருந்திருக்காது. அவர் இந்த உலகில் வாழ்ந்த போது அதிக தடவைகள் உச்சரித்த வார்த்தைகளில் ஒன்று "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்பதாகும். ஒருமுறை பேதுரு ஆண்டவரைப் பார்த்து "ஆண்டவரே என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்து வந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழுமுறை மட்டுமா?" என்று கேட்டார். அதற்கு இயேசு அழகான குண்டக்க மண்டக்க பதில் ஒன்றைச் சொன்னார். "ஏழுமுறை மட்டுமல்ல. எழுபதுதடவை ஏழு முறை" என்றார். பேதுரு கணக்கிலே கொஞ்சம் மக்காக இருந்ததினால் ஆண்டவரிடம் பதில் கேள்வி கேட்காமல் விட்டிருக்கலாம். ஆனால் இன்று எம்மிடையே யூதாசைப் போலக் கொஞ்ச புத்திசாலிகள் எழுபது தடவை ஏழு முறை என்ற ஆண்டவரின் பதிலை 70x7 என்று பெருக்கல் கணக்கிட்டுப் பார்க்கக் கூடும். ஆனால் ஆண்டவர் மன்னிப்பதற்கு எல்லைகளோ வரையறைகளோ கிடையாது என்பதை எடுத்துச் சொல்லவே இவ்வாறு பதில் அளித்தார்.

- "மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத்தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காது விடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்." (மத்தேயு 6:14-15)
- "நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும் போது யார் மேலாவது நீங்கள் மனத் தாங்கல் கொண்டிருந்தால், மன்னித்து விடுங்கள். அப்போது உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்" (மாற்கு 11:25-25)
- "பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக் காதீர்கள். அப்போது தான் நீங்கள் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீகள்" (லூக்கா 6:37)

நீ ஆண்டவருக்கு பலி செலுத்த வருகின்ற பொழுது உன்னுடைய சகோதரனோடு உனக்கு ஏதும் மனத்தாங்கல் இருப்பதாக நீ உணர்ந்தால் நீ கொண்டு வந்த காணிக்கையை அந்த இடத்திலேயே வைத்துவிட்டு முதலில் போய் உன் சகோதரனோடு உன் உறவைப் புதுப்பித்துக்கொள். அப்புறமாக வந்து உன் பலியைச் செலுத்து உன் பலி ஏற்றுக் கொள்ளப்படும். உன் அயலானை மன்னிப்பாயா?

## 51 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 06 . 10 . 1962



விண்ணில் 26 . 06 . 1970

அமரர்

### செல்வி மிரியம் சாமினி சில்வெஸ்ரர்

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம்
நான் குடியிருக்க வேண்டும்"

இவரது ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டுவோம்.

AD 49

சுருவில்

பிரிவில் துயருறும்
குடும்பத்தினர்

## 3ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 28 . 07 . 1955



இறைவன் அடியில் 17 . 06 . 2021

அமரர்

### துரைசிங்கம் இமல்டா மரீனா

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"

அன்பிற்கு இலக்கணமாகவும்
அமைதியின் உருவமாகவும்
பாசத்தின் இருப்பிடமாகவும் எம்மை எல்லாம் வளர்த்து
ஆளாக்கிய தாயே நொடிப்பொழுதில்
நாம் எதிர்பாரா வேளை
எமை எல்லாம் துன்பத்தில் விட்டு
விண்ணகம் நோக்கிச் சென்றீரோ
அம்மா! இறைவனோடு வாழ உம் ஆன்மா
இறைவனின் சந்நிதானத்தில் இளைப்பாறப்
பரமனிடம் வேண்டி நிற்கின்றோம் தாயே!

AD 52

4ம் வட்டாரம்,
மண்டைதீவு.

பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி, உறவினர்கள்

# போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வன்னி கியூடெக் நிறுவனம் உதவி



கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் போரினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட நிலையில் வாழும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் செயற்றிட்டம் ஒன்றைக் கரித்தாஸ் - வன்னி கியூடெக் நிறுவனம் முன்னெடுத்துள்ளது. கரித்தாஸ் செடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற இச் செயற்றிட்டத்தின் மூலமாக மாணவர்களுக்கான மாதாந்த கல்விக் கொடுப்பனவு, மாதாந்த சத்துணவுப் பொதி வழங்கல், மாணவர்களுக்கான விசேட பயிற்சிப் பாசறை நிகழ்வுகள் என்பன நடாத்தப்பட்டு வருகின்றன.

இச் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக, மாணவர்களுக்கான கற்றல் வசதியினை மேம்படுத்திக்கொடுக்கும் நோக்கோடு, தேறாங்கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, குமுழமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மற்றும் மாணவர்களுக்கான மேலதிகக் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி நடாத்தி வரும் பரந்தன் அறிவொளி சமூகமட்ட அமைப்பு ஆகியவற்றுக்கு ஒரு தொகுதி தளபாடங்கள் கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்தந்தை செபமாலை செபஜீவன் அவர்களால் 25.06.2021 அன்று வழங்கப்பட்டது.

# மானிப்பாய் பங்கில் வசதி குறைந்த குடும்பத்திற்கு இல்லம் அன்பளிப்பு



மானிப்பாய்ப் பங்கில் வாழ்ந்து வந்த வீடில்லாத வறிய குடும்பம் ஒன்றிற்குப் புனித அன்னம்மாள் ஆலய மக்கள் ஒன்று சேர்ந்து சுமார் 3,65,000.00 பெறுமதியான ஒரு அழகிய வீட்டைக் கட்டிக் கொடுத்துள்ளனர். பங்குத்தந்தை அருட்பணி ம. றெக்ஸ் சவுந்தரா அடிகளார் ஆலயப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து அவ்வீட்டை ஆசீர்வதித்து 23.06.2021 அன்று வீட்டு உரிமையாளரிடம் கையளித்தார்.

# மரியசேவியர் அடிகளின் நினைவாகத் தொடர் ஆய்வரங்கு

யாழ். திருமறைக்கலாமன்றம் நடத்தும் கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளாரின் பன்முக ஆளுமை தொடர்பான மெய்நிகர் வழியிலான தொடர் ஆய்வரங்கு கடந்த மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள் அரைநூற்றாண்டுக்கும் மேலாக கலை வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்தவர்.

அவர் ஆற்றிய பன்முகப்பணிகளை ஆய்வு செய்யும் நோக்கில் மாதந்தோறும் வெவ்வேறு தலைப்புக்களில் தொடர் ஆய்வரங்குகளை நடத்துவதற்குத் திருமறைக்கலா மன்றம் திட்டமிட்டுள்ளது. அதன் முதல் ஆய்வரங்கமாக மெய்நிகர் வழியில் நடைபெற்ற கலைத்தூது நீ. மரியசேவியர் அடிகள் ஏற்படுத்திய திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியம் என்ற தலைப்பில் ஆய்வரங்கு அமைந்தது.

# அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை இறைவனடி சேர்ந்தார்



யாழ். திருக்குடும்பக் கன்னியர் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை அவர்கள் 28.06.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

யாழ். மறைமாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் பணியாற்றியதுடன் கல்விப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். அன்னாரின் பணிவாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறி இவரின் ஆன்மா இறைவனில் அமைதிபெற மன்றாடுகின்றோம்.

# ஆரோபணம் சிறுவர் இல்லத்திற்கு புதிய இயக்குநர்



கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள ஆரோபணம் சிறுவர் இல்லத்தின் புதிய இயக்குநராக அருட்திரு எமில் போல் அடிகளார் யாழ் ஆயரினால் நியமிக்கப்பட்டார் . யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் முன்னிலையில் 17-06-2021 வியாழக்கிழமை அன்று ஆரோபணம் சிறுவர் இல்லத்தில் தனது பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

கடந்த 5 ஆண்டுகளாக ஆரோபண சிறுவர் இல்ல இயக்குநராகப் பணியாற்றி பணி இடமாற்றம் பெறும் அருட்பணி யூட் அமலதாஸ் அடிகளார் யாழ் மறைமாவட்டத்திற்குச் சொந்தமான அளம்பில் இசிதோர் - எமிலியானூஸ் தோட்டத்தின் நிர்வாகப் பணிப்பாளராக யாழ். ஆயரினால் நியமனம் பெற்றுச் செல்லுகின்றார்.

# திருமறைக்கலாமன்றம் கொவிட் – 19 ஆல் பாதிக்கப்பட்டோருக்கு உதவி



யாழ். திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் அனுசரணையுடன் ஒரு தொகுதி உலருணவுப் பொருட்கள் கோவிட் 19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

கொரோனாப் பேரிடர் காலத்தில் அன்றாடம் தொழில் செய்பவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாமல் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் இந்நேரத்தில் சமூக மட்டத்தில் இயங்கும் பல அமைப்புக்களும் இந்நிவாரணப் பணியில் ஈடுபட்டுவருகின்றன. இந்நிலையில் யாழ். திருமறைக்கலாமன்றம், மன்றத்தின் இயக்குநர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாரின் 59 வது குருத்துவ தினத்தினை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் குழந்தைகளுக்கான பால்மாக்களும் வழங்கப்பட்டன.

# கரம்பொன் புனித செபஸ்ரியார் பங்கில் இலவச குடிநீர் வசதி



கரம்பொன் புனித செபஸ்ரியார் ஆலயப் பங்குத்தந்தை மற்றும் ஆலய இளைஞர்களின் முயற்சியால் ஆலயக் கிணற்றிலிருந்து இலவச குடிநீர் வசதிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த வாரம் மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டது.

சித்திரை மாதம் முதல் ஐப்பசி மாதம் வரை நீடிக்கும் கடும் வெயில் காரணமாக ஏற்படுகின்ற வறட்சியால் இலங்கையின் வட பகுதியில் உள்ள பல கிராமங்கள் பாதிப்படைகின்றன. விசேடமாக யாழ்ப்பாணம் தீவகப்பகுதியில் கிணறுகள் மற்றும் குளங்கள் கூட வற்றிவிடுவதால் அப்பகுதி மக்கள் குடிநீர் மற்றும் அன்றாடப் பாவனைக்குரிய நீர் இன்றிப் பாதிக்கப்படுகின்றார்கள். விவசாயிகள் இக்காலப் பகுதியில் எந்தவித பயிர்ச்செய்கைகளையும் செய்யமுடியாமையால் பல குடும்பங்களின் பொருளாதார வீழ்ச்சிக்கும் இவ்வறட்சி காரணமாக அமைகின்றது.

பிரதேச சபையினரின் நீர் வழங்கும் திட்டம் ஒரு புறம் இருக்க, நடமாடும் நீர்த் தாங்கிகள் மூலமாகத் தனியாரிடம் இருந்து பணம் கொடுத்தே மக்கள் தண்ணீரைப் பெற்றுக்கொள்கின்றார்கள். கரம்பன் புனித செபஸ்ரியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி M.L. தயாகரன் அடிகள் மற்றும் பங்கின் சில இளைஞர்கள் இணைந்து நலன் விரும்பிகளின் உதவியுடன் ஆலயக் கிணற்றிலிருந்து குடிநீர் வசதிகளைச் செய்துள்ளார்கள்.

கடந்த வாரம் பாவனைக்கு விடப்பட்ட இத்திட்டத்தின் மூலமாக ஆலயத்தைச் சூழவுள்ள மக்களும், வீதியால் பயணிக்கும் மக்களும் தங்களின் குடிநீர்த் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு யூலை மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.